விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள் : இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 30 வியாழக்கிழமை (15.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 332

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பொதுநலவாய உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது

## அதிர்ச்சி கொடுத்தது பிரித்தானியா

(லண்டன்)

மனிதவுரிமைகள் இலங்கையில் கேள்விக்குறியாகியுள்ள நிலைமையில் அடுத்த பொதுநலவாய நாடுகளின் (கொமன்வெல்த்) உச்சி மாநாட்டை கொழும்பில் நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முடிவு தவறானது என பிரித்தானிய வெளிவிவகாரக் குழு தெரிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.மீளாய்வு அறிக்கை பான் கீ மூனிடம் ஒப்படைப்பு

(நியூயோர்க்)

இலங்கையில் 2009இல் முடிபுக்கு வந்த போரின் இறுதி மாதங்களில் ஐ.நாவின் பங்கு குறித்து ஆராய ஐ.நா. பொதுச் செயலரால் நியமிக்கப்பட்ட சுதந்திர மீளாய்வுக் குழுவின் அறிக்கை நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.தலைமையகத்தில், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனைச் சந்தித்த ஐ.நாவின் முன்னாள் மூத்த அதிகாரி சாள்ஸ் பெற்றி, அவரிடம் இந்த அறிக்கையை கையளித்தார்.

அதன் பின்னர், சாள்ஸ் பெற்றியும், அவர் இந்த அறிக்கையை தயாரிக்க உதவிய இரு அதிகாரிகளும், ஐ.நா. பொதுச் செயலரை சந்தித்துக் கலந்துரையாடினர்.

எனினும், இந்த அறிக்கை உடனடியாக பகிரங்கப்படுத்தப்படுமா? என்பது குறித்து இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை இலங்கையில் நடந்து முடிந்த போரின் இறுதிக்கட்டத்தில், ஐ.நா. மன்றம் (19ஆம் பக்கம் பார்க்க)

## 13ஐ நகர்த்தி விளையாடுவதில் எவ்வித பயனும் இல்லை!



### மனோ கணேசன் கண்டிப்பு

(கொழும்பு)

13ஆவது, 19ஆவது, 20ஆவது, 21 ஆவது, 22ஆவது எனிப் போகும் இலக்கங்களில் எமக்கு அக்கறையில்லை. ஆனால் 13க்கு கீழே போக முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

13ஆம் திருத்தத்திற்கு மேலே போகிறோம் என்பது கற்றுக்கொண்ட ஆணைக்குழு என்ற அறிக் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பணியாளர்களை இலங்கை மிரட்டியது!

### குற்றச்சாட்டை மறுக்கிறார் பாலித கோகன்ன

(கொழும்பு)

இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தில் (2009) ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்களை பயமுறுத்தி பணிய வைத்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் முற்றாக மறுத்திருக்கிறது.

பி.பி. சிக்கு கசிந்த ஒரு ஐ.நா. அறிக்கையில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்றிருந்தன. பொதுமக்களை பாதுகாக்க ஐ.நா. தவறியது என்று தன்னைத்தானே ஐ.நா. குற்றம்சாட்டிக் கொள்ளும் அந்த அறிக்கையில் ஐ.நா. பணியாளர்கள் பகிரங்கமாக கருத்துத் தெரிவிப்பதை குறைப்பதற்காக இலங்கை அரசாங்கம் (19ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்.முகாம்கள் மோசமாக உள்ளன

(நியூயோர்க்)

அவுஸ்திரேலியாவின் நவ்றுதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தஞ்சக்கோரிக்கையாளர்களின் நிலைமை மிக மோசமாக விமர்சனத்துக்குள்ளாகும் வகையில் அமைந்துள்ளதாக ஐ.நாவின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குற்றம்சாட்டியுள்ளார்.

அண்மையில் இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ள தஞ்சக் கோரிக்கையாளர்கள் உண்ணாவிரதம் (19ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆவது இரத்தா? திருத்தமா? சகல கட்சிகளுடனும் பேசுவோம்

### அமைச்சர் நிமல் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தை திருத்துவதா? அல்லது அதனை இரத்துச் செய்வதா? என்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் அடங்கலாக சகல கட்சிகளுடனும் பேசுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்று சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை விடுத்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துப் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், (19ஆம் பக்கம் பார்க்க)

## பரிதி கொலைக்கு இலங்கையே பொறுப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பாளருமான நடராசா மதிதரன் என்ற இயற்பெயரைக் கொண்ட பரிதி (வயது 49) படுகொலை செய்யப்பட்ட மைக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என்று கொல்லப்பட்டவரது மகள் குற்றம்சாட்டியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் திறன் வாய்ந்தவர்களே தனது தந்தையை கொலை செய்துள்ளனர் என்று (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைக் குழுவின் தலைவராக அனுர பிரியதர்ஷன யாப்பா நியமனம்

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியல் குற்றப்பிரேரணை தொடர்பான விசாரணைக்காக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு நேற்று முற்பகல் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

11 பேர் அடங்கிய நாடாளுமன்ற தெரிவுக்கு அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனைத்தவிர நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜெயந்த, ராஜித்த சேனாரத்ன, டிலான் பெரேரா, விமல் வீரவன்ச, நியோமல் பெரேரா ஆகிய அமைச்சர்கள் ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் உறுப்பினர்களாக பணியாற்றவுள்ளனர்.

எதிர்க்கட்சி சார்பாக ஜோன் அமரதுங்க, லக்ஷ்மன் கிரியல்ல, ஆர்.சம்பந்தன் மற்றும் விஜித ஹேரத் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகள் வீடுகட்ட 25 கோடி ரூபாய் நிதி!



### ஜெயலலிதா ஒதுக்கினார்

(சென்னை)

தமிழகத்தில் 21 மாவட்டங்களில் உள்ள இலங்கை அகதி முகாம்களில் 2,500 புதிய வீடுகளை கட்டுவதற்கு 25 கோடி ரூபாய் நிதி (இந்திய மதிப்பில்) ஒதுக்கீடு செய்ய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா உத்தர விட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலக வங்கிப் பணிப்பாளர் இன்று கொழும்பு வருகை

(கொழும்பு)

உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஸ்ரீ.முலியாணி இந்திராவதி நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்புக்கு இன்று வியாழக்கிழமை விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 19-ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடவுள்ளதுடன் நாட்டின் முன்னேற்றத்துக்கு இந்த அபிவிருத்தி நிறுவனம் எவ்வாறு கூடுதலான ஒத்துழைப்புக்களை வழங்கலாம் என்பது தொடர்பிலும் ஆராயவிருக்கின்றார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் உலக வங்கிக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்துவது தொடர்பிலும் இவர் தனது விஜயத்தின்போது முக்கிய கவனம் செலுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்களுக்கு தேவையான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்களை அவர் உருவாக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-1)

# ஐ.நா. விசாரணை அறிக்கை முழுமையாகக் கிடைக்கவில்லை

## இந்திய இணை அமைச்சர் தெரிவிப்பு




இலங்கைப் போரின்போது ஐ.நா அதிகாரிகள் அலட்சியமாக இருந்தது குறித்து ஐ.நாவின் உள் விவகாரத்துறை அறிக்கை முழுமையாகக் கிடைக்கவில்லை என்று இந்திய மத்திய இணை அமைச்சர் இ.அகமது தெரிவித்தார்.

ஐ.நாவின் உள்விசாரணை அறிக்கை முழுமையாகக் கிடைக்கவில்லை என சென்னை விமான நிலையத்தில் நேற்றுச் செய்தியாளர்களை சந்தித்த மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் இ.அகமது தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சரியான நேரத்தில் இந்தியா குரல் கொடுத்துள்ளது. ஐ.நாவின் அறிக்கை முழுமையாகக் கிடைத்த பிறகு அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிபு செய்யப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ந-1)

# இ.போ.ச. பணியாளர்கள் நாளை பணிப்புறக்கணிப்பு

(கரவெட்டி)

பருத்தித்துறை இ.போ.ச பேருந்து சாலையின் 140 பணியாளர்கள் நாளை வெள்ளிக்கிழமை ஒருநாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதனால் பருத்தித்துறையிலிருந்து யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்கள் மற்றும் வெளிமாவட்டங்களுக்கான இ.போ.ச பேருந்து சேவைகள் இடம்பெறமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

இப்போராட்டத்திற்கு காரணம் பருத்தித்துறை இ.போ.ச பணியாளர்களது கடந்த மாதச் சம்பளம் இன்னமும் வழங்கப்படாமையே ஆகும்.

கடந்த 8-ம் திகதி வழங்கப்பட வேண்டிய வேதனம் இன்னமும் வழங்கப்படாமையால் தீபாவளிப் பண்டிகையின்போது தமது குடும்பங்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியிருந்ததாக பாதிக்கப்பட்ட பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைந்து கவனமெடுத்து தமது சம்பள பிரச்சினையை தீர்க்க வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். (ந-24)

# விருது வழங்கல்


(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் மெகா வாசி விருது வழங்கும் நிகழ்வு நாளை 16-ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை மத்திய வங்கியின் வட மாகாண வங்கி முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் வட மாகாண உதவி பொது முகாமையாளர் கே.ஈ.டீ.சுமணசிறி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வினை இலங்கை வங்கியின் வட மாகாண திட்ட முகாமையாளர் மற்றும் பணியாளர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (ந)

# மரண அறிவித்தல்



பிரபல வர்த்தகர்

## முத்துத்தம்பி தயாபரன் (ராசன் AM)

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகன் முத்துத்தம்பி தயாபரன் (ராசன்AM) 13.11.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான என்.கே.சிவப்பிரகாசம் பரமேஸ்வரி ஆகியோரின் மருமகனும் ஜெகதீஸ்வரி (வவா) இன் அன்புக் கணவரும் சாளினி, சகீஜன், லதூஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலாமதி நேசரத்தினம், காந்தமலர், நேசமலர், தயாளன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசரத்தினம் விஜயரதி, பரராசசிங்கம் சுகுமார், சுபாஜினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.11.2012 வியாழக்கிழமை இன்று 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (965) குடும்பத்தினர்



வட்டக்கச்சி

## அருள்மிகு சபரி ஜயப்பன் ஆலயம்

வட்டக்கச்சி சில்வா வீதியில் அமைந்துள்ள அருள்மிகு சபரி ஜயப்பன் ஆலயத்தில் 16.11.2012 வெள்ளிக்கிழமை (கார்த்திகை 1ம் திகதி) காலை 10 மணிக்கு செல்வா நகர் முத்துமாரியம்மன் ஆலய குருசாமிகள் குணரத்தினக்குருக்கள், விபுலானந்தக் குருக்கள் ஆகியோரால் ஜயப்பன் விரதத்தை முன்னிட்டு மாலை அணிவித்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் மாலை அணிந்து விரதம் இருக்கும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஜயப்பன் ஆலயம்,
சில்வா வீதி, வட்டக்கச்சி
ஆலய பரிபாலன சபையினர்.
(C-1514)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஜானகி தர்மஜீவன் எழுதிய சுகாதாரமும் உடற்கல்வியும் நூல் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10.00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி எல்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வத்துரை உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ந-8)

# மண்டல பூஜையும் அலங்கார உற்சவமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவதர்ம சாஸ்த்தா திருக்கோயிலின் (ஜயப்பன் கோயில்) வருடாந்த மகரஜோதி மண்டலப்பூஜை பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்று ஜயப்பன் (குருசாமி) புனித மாலை அணிவித்தல் நடைபெறும்.

அத்துடன் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதின்மூன்று தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 12-ம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பைரத திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் 14-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஊரெழு பர்வத வர்த்தனி ஆலய புனித புஸ்கரணி தடாகத்தில் நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ந-9)


## பிள்ளையார் இன்

50% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக் கிழங்கு கறியுடன் ரூ 70/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-

(C-1518) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## வாடகைக்கு தேவை

பல்கலைக்கழக மாணவனுக்கு
திருநெல்வேலி அல்லது நல்லூருக்கு
அருகாமையில் வாடகைக்கு அறை தேவை.

தொடர்புகளுக்கு: 077 9295932

(967)


## ஆண்டு ஐந்தில் அகம் நெகிழும் நினைவு அஞ்சலி

மலர்வு : 12.06.1918
உதிர்வு : 12.11.2007



### திருமதி செல்லத்துரை தங்கம்மா

திதி: துதியை

ஆண்டு ஐந்து வந்ததம்மா
மீண்டு ஒருமுறை வந்து துயர் தீரும் அம்மா
நின் கோல முகம் காணத் தணியாத
தாகம் அம்மா
பாவி என்னை விட்டு அரன் அடி
சேர் ஏன் அம்மா விரைந்தாய்
நெஞ்சிருக்கும் வரை நின் நினைவு இருக்கும்

என்றும் நின் பிரிவில் :
வாழும் சேய் செ.பவானி (போதனாசிரியர், ஆங்கிலம்)

(966)


ஆசிரியர் முத்துலிங்கத்தின்
EASY ENGLISH
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்

செல்லா சினிமா யாழ்ப்பாணம்





ஓம் ஸ்ரீ சாயி ராம்

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17.08.1949



உதிர்வு
15.11.2006

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி நேசமலர் சின்னத்துரை

திதி : பூர்வபட்ச ஏகாதசி (25 / 10 / 2012)

அன்புக்கு அணிகலனாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்
சுமைதாங்கியாய் வாழ்ந்து
எமது இதயத்தில்
என்றும் அணையாத்
தீபமாய் சுடர் வீசும்
மறைந்தும்
மறையாத எம் அன்பு

அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கரைப்பிரான் ஆதி விநாயகப் பெருமானையும் ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாளையும் வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்,
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தொ.பே : 021 221 3058

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

(962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மதுவை மறக்கலாம்

''ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் சாதனை செய்ய வேண்டும்'' என்று ஆசை இருக்கும். ஒவ்வொருவருக்கும் சாராயம் குடிக்கிறதிலே சாதனை செய்ய வேண்டுமென்று ஆசை. என் அளவிற்கு யாரும் குடிக்க முடியாது என்று சவால் விட்டார்.

ஒரு சாராயக்கடையில் நின்று கொண்டு அவர் தாராளமாக குடித்துக்கொண்டிருந்தார்....ஒரு அளவிற்கு மேல் சென்றதும் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. நிதானம் தவறிப்போனார். அப்படி இருந்தும் கூட இன்னொரு ''கிளாஸ் ''கொடு என்று வாங்கினார். எப்படியும் அதை குடித்து விட வேண்டுமென முயற்சித்தார். ஆனால், அவருக்கு புரியவில்லை. அருகில் நின்றவரிடம் '' எனது வாய் எங்கே இருக்கிறது என்று பார்த்து சொல்லுங்கள். நான் சாராயத்தை அதிலே ஊற்றவேண்டும் ''என்றார்.

உடனே அந்த நபர் '' இது என்ன கேள்வி ? உனது வாய் உன் தலையிலேதான் இருக்கிறது'' என்றார்.

''ஓ ... அப்படியா... கண்டுபிடித்து சொன்னதற்கு மிகவும் நன்றி'' என்று கூறிவிட்டு அந்த சாராயத்தை அப்படியே தன் தலையில் ஊற்றிக் கொண்டார். இன்னொரு ''கிளாஸ் ''கொடுங்கள் என்று கேட்க ஆரம்பித்தார். இது உண்மையாக நடக்க கூடிய விடயம்தான். இப்படிப்பட்ட நபர் ஒருவரை எனக்கு தெரியும். அவரும் திடீரென வந்து என் முன்னால் நின்றார். '' சேர் .. இப்போது நான் மதுப் பழக்கத்தை நிறுத்திவிட்டேன் என்றார்'' ''அது எப்படி உன்னால் முடியும்'' என்று கேட்டேன் அவருக்கு யாரோ '' அட்வைஸ் செய்தாராம் ... ஒரு சில நல்ல பழக்கவழக்கத்தை கடைப்பிடித்தால் மதுவை மறந்து விடலாம்.

அது என்ன ... அந்த நல்ல பழக்கத்தை சொல்லுங்கள். அது அடுத்தவர்களுக்கும் உதவும். பத்து வழிகள் சொன்னார். அவை வருமாறு,

தினமும் காலையில் இளஞ்சூடான நீரிலே பழச்சாறு கலந்து பருகி வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும். தினமும் இரு தடவை குளிக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் குளித்தவுடன் வெந்நீர் அல்லது எலுமிச்சாறு குடிக்க வேண்டும்.

ஒரு சாப்பாட்டுக்கும் இன்னொரு சாப்பாட்டுக்கும் இடையில் 8 இலேயிருந்து 10 டம்ளர் வரைக்கும் நீர் பருக வேண்டும்.

சில இடங்களில் உட்கார்ந்து இருந்து மது அருந்தலாம் என்று தோன்றினால் அவ்விடத்தை தவிர்க்க வேண்டும்.

சாப்பிட்டவுடன் தூங்கக்கூடாது. வெளியே போய் ஒரு ஐந்து நிமிடம் காலாற நடந்து வரவேண்டும்.

சில நண்பர்களின் வீட்டுக்கு போனால் உடனே மது கிளாஸை எடுத்து நீட்டுவார்கள்... அது ஒரு உபசரிப்பு. அப்படியான நண்பர்கள் இருக்கும் வீடுகளுக்கு போகக்கூடாது.

புரதச்சத்து உணவு அத்துடன் பழம் ,பால், தயிர், தேன், பழச்சாறு, காய்கறிகள் இவற்றையெல்லாம் அதிகளவு உட்கொள்ள வேண்டும்.

தியானம்-யோகாசனம் இவை இரண்டும் முக்கிமானது. இழந்த தேக பலத்தையும் மனப்பலத்தையும் இது மூலமாக மீட்கலாம்.

மது பழக்கத்திலிருந்து விடுபட மேற்கூறிய ஆலோசனைகள் ஒரு சிறந்த வழியாகும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# மூன்று தசாப்த காலத்திற்கு முன்பிருந்த நிலையை நோக்கி யாழ்ப்பாணம் நகர்கிறது

### வடக்கு மாகாண ஆளுநர் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

முப்பது வருடத்திற்கு முன்பிருந்த நிலைமைகளை நோக்கி வடக்கு மாகாணம் பயணித்துக் கொண்டிருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்து முன்னேற்றத்தை நோக்கி என்னும் தொனிப்பொருளில் வட மாகாண கண்காட்சி- 2012 நேற்று யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவிற்கு முன்பாகவுள்ள யாழ்.மாநகர சபை வளாகத்தில் ஆரம்பமானது. இதில் பிரதமவிருந்தினராககலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பின்பு வடக்கு மாகாணம் எழுச்சி பெற்று வருகின்றது. உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் வேகமாக சீர் செய்யப்பட்டு வருகின்றன. நாட்டில் இடம்பெற்ற 30 வருட கால யுத்தத்திற்கு முன்பிருந்த நிலைமைகளை வடக்கு மாகாணத்தில் ஏற்படுத்துவதற்கான இலக்கினை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

அபிவிருத்தி பணிகளின் போது கிராமங்களையும் அதிகளவில் உள்ளடக்கியுள்ளோம். உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக கிராமங்களை அபிவிருத்தி செய்து வருகின்றோம்.

அதுமட்டுமன்றி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள், கூட்டுறவுச்சபைகள், ஏணைய திணைக்களங்களையும் விருத்தி செய்து வருவதோடு அவற்றினை வளப்படுத்துவதற்கான நடவடிக்கைளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும் வடமாகாணத்தில் மீள்குடியேற்றப்பட்டு வரும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூட்டுறவுச் சபைகள் ஊடாக கடன் உதவிகளும் வழங்கி வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் மனோரஞ்சன், யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# அதிபர்- ஆசிரியர்கள் வேலை நிறுத்த எச்சரிக்கை

வரவு செலவுத் திட்டத்தில் உரிய சம்பளம் இன்மை மற்றும் ஏனைய நிவாரணங்கள் வழங்கப்படாமையை ஆட்சேபித்து இலங்கையின் ஆசிரியர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கென்று 30 மில்லியன் ரூபாய்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளன. எனினும் போர் இல்லாத சந்தர்ப்பத்திலும் பாதுகாப்புக்கு 230 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியே இலங்கையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் டிசெம்பர் 4 ஆம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 250 | 150 | 130 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-120 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 140-150 | 280 | 140 | 180 |
| தக்காளி | 70-80 | 90 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 40 |
| கோவா | 100 | 80 | 70 | 120 |
| கரட் | 100 | 120 | 80 | 160 |
| பூசணி | 60 | 80 | 50 | 60 |
| புடோல் | 80 | 100 | 70 | 100 |
| வாழைக்காய் | 50-60 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100-110 | 120-160 | 80 | 120 |
| பெரிய வெங்காயம் | 75 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 300 | 200 | 140 |
| வெண்டிக்காய் | 80-100 | 200 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 50-70 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 180 | 200 | 70 | 140 |
| லீக்ஸ் | 100 | 110 | 70 | 120 |
| பீற்றூட் | 50 | 80 | 40 | 120 |
| கறிமிளகாய் | 200 | 200 | 100 | 200 |
| முருங்கைக்காய் | 90 | 160 | 70 | 120 |
| போஞ்சி | 220 | 240 | 70 | 200 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 140 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 200-220 | 280 | 180 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 30 | 30-35 |

# இராசி பலன்

15.11.2012
(ஐப்பசி 30, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு,
துதியை முன்னிரவு 11.58 மணிவரை
அனுசம் பிற்பகல் 12.26 மணிவரை
இராகுகாலம் 1.38-3.08 மணிவரை
சுபநேரம் 7.38-9.08 மணிவரை

**மேடம்**

மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, சிலரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம்.

**இடபம்**

பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், நம்பி வந்தவர்களுக்கு கை கொடுத்து உதவுவீர்கள், முருகன் வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்**

உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், வியாபார விருத்தி ஏற்படும் நாள், ஆரோக்கியம் சீராகும், சுவாரஸ்யமான நாள்.

**கடகம்**

தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்**

பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், தொழில் முன்னேற்றமுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**

மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், எப்படி நடக்கும் என நினைத்த காரியமொன்று நல்ல விதமாக நடைபெறலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும்.

**துலாம்**

புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், தொலைபேசி வழித்தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**விருச்சிகம்**

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், விலை உயர்ந்த பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**தனுசு**

இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது,சுப செலவுகள் அதிகரிக்கும், வழிபாடுகள் வளர்ச்சியைக் காட்டும்.

**மகரம்**

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கும்பம்**

எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், புதிய திட்டங்களில் முன்னேற்றமுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்**

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம், மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், சுணங்கிய காரியங்கள் கை கூடும், எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் தாக்கப்பட்ட வழக்கு ஒத்திவைப்பு

(கரவெட்டி)


வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பருத்தித்துறை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் கடந்த மாதம் 25ஆம் திகதி பாடசாலை அதிபர் அலுவலகத்தில் வைத்து இளைஞர் ஒருவரால் தாக்கப்பட்டார்.


இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்துஅவ் இளைஞர் கைது செய்யப்பட்டார். இந் நிலையில் அதிபரும் குறித்த இளைஞரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு இரு தரப்பினரும் சமாதானமாக செல்வதாக தெரிவித்ததையடுத்து நீதவான் இருவரையும் விடுவித்து அடுத்த தவணைக்கு வழக்கை ஒத்தி வைத்தார்.

இந்நிலையில் கடந்த 12 ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் இவ் வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ் வழக்கின் எதிரியான இளைஞர் தனது சகோதரியான மாணவியை பாடசாலையில் வைத்து அதிபர் தாக்கியதாக முறைப்பாடு செய்ததையடுத்தே இவ் வழக்கு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

நன்றி:-ஐலன்ட்.




# தகுதிவாய்ந்த அதிபரை நியமிக்கக்கோரி உடுப்பிட்டி ம.கல்லூரியில் ஆர்ப்பாட்டம்




(கரவெட்டி)

வடமராட்சி உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு தகுதியான அதிபரை நியமிக்குமாறு கோரி நேற்றுக் காலை 8 மணிக்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களின் பெற்றோர்களும் பாடசாலை நலன் விரும்பிகளும் பாடசாலை முன்பாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு எதிராக தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

வடமராட்சி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தரம் 1 ஏபி கல்லூரியாகும். இக் கல்லூரிக்கு அதிபராக இருந்த திருமதி றஞ்சிதம் குட்டித்தம்பி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர்பதவியுயர்வு பெற்று வடமராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்று சென்றுள்ளார்.

அதன்பின் இக்கல்லூரியை பிரதி அதிபரே வழி நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் இக் கல்லூரிக்கு புதிய அதிபரொருவர் நியமிக்கப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுக்காலை பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் தமது எதிர்ப்பை வெளியிட்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

அவ்ஆர்ப்பாட்டத்தில்கல்லூரியின் பழைய மாணவி ஒருவரே இப்பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அப்பகுதியில் வசிப்போராக இருக்க வேண்டுமென்றும் தரம் 1 ஏபி கல்லூரி என்பதால் தகுதியான அதிபர் ஒருவரே இக் கல்லூரிக்கு நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமாரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது தமது வலயத்தில் தரம் 1 ஏபி பாடசாலைக்கு தற்போது தகுதியான மூன்று பெண் அதிபர்களே உள்ளனரென்றும் அவர்கள் வேறு பாடசாலையில் பணியாற்றி வருகின்றனர்.

இதில் ஒரு அதிபர் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஓய்வு பெறவுள்ளார். அவ் அதிபரை நியமிக்க முடியாமல் உள்ளதாலேயே அடுத்த தரத்தில் உள்ள அதிபரை நியமித்ததாக அவர் தெரிவித்தார்.

வேண்டுமானால் அப் பாடசாலையின் பழைய மாணவர்கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் தரம் 1 ஏபி பாடசாலைக்குரிய பெண் அதிபர் ஒருவரை இனங்கண்டால் தாம் அவ் அதிபரை நியமிக்க முடியுமென அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள சம்பவ இடத்திற்கு வந்த வடமராட்சி வலயக் கல்வி நிர்வாக அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.நற்குணலிங்கம் ஆகியோர் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி சாதகமான முடிவை தாம் அறிவிப்பதாக தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த வல்வெட்டித்துறை, நெல்லியடிப் பொலிஸார் பாடசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினர். (அ-3-24)




## பேச்சுப் போட்டியில் இரண்டாமிடம்

(மல்லாகம்)

பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட இரண்டாம் மொழி சிங்களப் போட்டியில் வடமாகாண மட்டத்திலான போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தரம் 8 இல் கல்வி பயிலும் மாணவி சி.சஜித்தா பேச்சுப்போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளார்.இவர் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-21)

## நிர்வாகிகள் தெரிவு

(நல்லூர்)

நாயன்மார்க்கட்டு பாரதி மன்ற சனசமூக் நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரதி மன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக இ.மயில்வாகனம், செயலாளராக நா.சிவசம்பு, உப தலைவராக இ.கனகரத்தினம், உப செயலாளராக வே.கௌசிகன், பொருளாளராக ச.செல்வக்குமார், கணக்காளராக கி.கில்பேட்குணம் ஆகியோரும் 11 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-134)

# அரச சேவை பணியாளர்களே! மனச்சாட்சியுடன் சேவையாற்றுங்கள்

## மக்கள் மன்றாட்டமாக கோரிக்கை

(கரவெட்டி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் சிலர் மக்களின் தேவைகளினை அறிந்து சேவை செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் மக்கள் நீண்ட நேரமாக காத்திருந்து பெயர்ப்பதிவுகளை மேற்கொண்டு விட்டு வைத்தியரிடம் மருத்துவ பரிசோதனைக்காக செல்கின்றபோது அங்கு வைத்தியர்கள் பற்றாக்குறையால் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவல நிலையும் உள்ளது.

அத்துடன் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் மீதும் சில வைத்தியப் பணியாளர்கள் கடும் போக்கில் நடந்து கொள்வதால் நோயாளர்கள் பெரும் மனப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

சில தினங்களுக்கு முன் வீதி விபத்தில் படுகாயமடைந்த அலவாய் வட மத்தியைச் சேர்ந்த எஸ்.துஷாந் (வயது 26) என்ற இளைஞன் சிகிச்சைக்காக வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு கடமையில் இருந்த வைத்தியர்கள் குறித்த இளைஞனுக்கு முதலுதவி சிகிச்சை அளித்த பின் அவரது தலைக்காயத்திற்கு உடனடியாக தையல் போடப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளனர். இதனால் குறித்த இளைஞன் பி.ப. 2 மணிக்கு அனுமதிக்கப்பட்ட போதும் இவ் இளைஞனை கண்டு கொள்ளாத பணியாளர்கள் பின்னர் இரவு 8.30 மணிக்கே தையல் இட்டு சிகிச்சை அளித்துள்ளனர்.

இதனால் அவ் இளைஞனுக்கு தலையில் இருந்து அதிகம் இரத்தம் வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாக வடமராட்சி பிரதேசத்தில் அரச திணைக்களங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மக்களின் நலன் கருதி சேவை செய்வதில்லை என்றும் இதனால் மக்கள் தினம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். (அ-3-24)

# பருத்தித்துறை இ.போ.சவில் ஆளணிப்பற்றாக்குறை

## மக்கள் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)

பருத்தித்துறை இ.போ.ச. சாலையில் பேருந்து குறைபாட்டினாலும் ஆளணி பற்றாக் குறையினாலும்சீரானபோக்குவரத்துசேவையை பெற முடியாதுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து வேறு இடங்களுக்கு செல்லும் பேருந்துகளும் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகளுமாக 37 பேருந்துகள் தேவையாகவுள்ளது. தற்பொழுது அங்கு 31 பேருந்துகளே காணப்படுகின்றன.

அத்துடன் பணியாளர்கள் பற்றாக்குறை காணப்படுவதால் வடமராட்சி, பருத்தித்துறை இ.போ.ச. பேருந்து சாலை தமது பணியை சீராக மேற்கொள்வதில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் பின்தங்கிய பிரதேசங்களான வடமராட்சி கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்திற்காக பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் ஏனைய பிரதேசங்களும் மக்களும் இவ்வாறே பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, பருத்தித்துறை இ.போ.ச. பேருந்துசாலைக்கு பேருந்துகளையும் பணியாளர்களையும் வழங்கி உரிய அதிகாரிகள் பேருந்து சேவையை சீராக பெற ஆவன செய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக நாட்டில் சிறைச்சாலை பாதுகாப்பு அமைச்சின் கீழ் வருவதில்லை

## கருஜயசூரிய எம்.பி.ஆதங்கம்

(கொழும்பு)

**சிறைச்சாலைகளை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவர வேண்டும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்திருப்பதானது என்னை ஆச்சரியப்பட வைத்தது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**



ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலைகள் ஆணையாளரின் இக் கருத்தானது பிறிதொருவரின் தூண்டுதலின் பேரில் தெரிவிக்கப்பட்டதா? அல்லது சுயமாக அவர் தெரிவித்தாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

ஜனநாயக நாடொன்றில் சிறைச்சாலைகள் ஒருபோதும் பாதுகாப்பு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படுவதில்லை. இவ்வாறான நிகழ்வுகள் சர்வாதிகார ஆட்சியிலேயே இடம்பெறுவதுண்டு. ஜனநாயக நாட்டின் கைதிகள் மனிதாபிமானமுடையவர்களாகவே கருதப்படுகிறார்கள்.

பொதுவாக இவ்வாறான கைதிகளை புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைந்து வாழச் செய்வதே ஜனநாயக நாட்டு சிறைச்சாலைகளின் கடமை.

சிறைகளும் பொலிஸ் சேவையும் இன்று தேவையற்ற அரசியல் தலையீடுகளால் சீரழிந்து வருகிறது. மோசமான குற்றவாளிகள் சிலர் அரசியல்வாதிகளின் நம்பிக்கைக்குரியவர்களாக மாறியிருப்பதும் இத்தகைய சீர்கேட்டிற்கு காரணம் எனலாம்.

தற்போதைய சிறைச்சாலை ஆணையாளரின் நாடகங்களை நாங்கள் தெளிவாக அறிந்து வைத்திருக்கின்றோம். முன்னாள் இராணுவ தளபதி சிறையில் இருந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கூட பார்க்க விடாமல் செய்து சிறைச்சாலை சட்டங்களை மீறியிருந்தார். இது போன்ற சட்டமீறல்கள் முன்னொரு போதும் நடந்ததில்லை.

அதுமட்டுமல்லாது கடந்த வெள்ளிக்கிழமை வெலிக்கடை சிறைச்சாலையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்திற்கு முழுப் பொறுப்பினையும் சிறைச்சாலைகள் ஆணையாளரே ஏற்க வேண்டும்.

இதுபோன்ற சம்பவங்கள் வெலிக்கடையில் மட்டும் நடைபெறவில்லை. இலங் கையின் அனைத்து பாகங்களிலும் நடைபெற்று வருவதாக முறைப்பாடுகளில் கிடைக்கின்றன. இது நிர்வாக சீர்கேட்டினை எடுத்துக் காட்டுகிறது.

அது மட்டுமல்லாமல் சிறைச்சாலை தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொண்டு கடமை தவறிய அதிகாரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# அதிவேக நெடுஞ்சாலையை உகண்டா ஜனாதிபதி பார்வை

(கொழும்பு)

உகண்டா ஜனாதிபதி யோவேறி கபுடா முஷவேனி தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்து அந்த நெடுஞ்சாலையை பார்வையிட்டுள்ளார்.

நான்கு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள உகண்டா ஜனாதிபதியும் அவரது பாரியாரும் அந்நாட்டு அமைச்சருமான ஜெனட் கடகா முஸாமி ஆகிய இருவருமே தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்றைய தினம் பயணித்துள்ளனர்.

கொட்டாவ பிரதான நுழைவாயின் ஊடாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசித்த இவ்விருவரும் களனிகம வரை பயணித்ததாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த முதலாவது வெளிநாட்டு தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நூல் வெளியீடு

திருமதி ஜானகி தர்மஜீலன் எழுதிய சுகாதாரமும் உடற்கல்வியும் எனும் நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விபணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-9-136)

# விசேட பூஜை

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி நாககன்னி அம்பாள் ஆலய மாதாந்த முதல் வெள்ளிக்கிழமை விசேட பூஜை இன்று நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று அம்மாள் வீதியுலா வருதலும் நடைபெறும். (அ-9)




ஓம்
சுவாமியே சரணம் ஐயப்பா

**அகில இலங்கை சாட்டுப்பத்தூர் என வழங்கும் உரும்பிராய் சிவதர்மசாஸ்தா ஆலயம்**

ஐயன் அடியார்களே! 16.11.2012 வெள்ளி முதல் 14.01.2013 சனி வரை 60 தினம் மாலை 4 மணிக்கு அபிஷேகம், பூசை, பஜனை உற்சவம் நடைபெறும். இக்காலங்களில் இடையில் உற்சவம்- தேர்-தீர்த்தம், மகிஷி சம்காரம் என்பன நடைபெறும்.

16.11.2012 காலை 6 மணிமுதல் 8.30 மணிவரை ஐயப்பன் புனித மாலைபோடும் நிகழ்வும் சபரி யாத்திரை மேற்கொள்ள முடியாதவர்கட்கு நமது ஆலயத்தில் இருமுடி கட்டி கட்டுவன் ஐயப்பன் ஆலயத்தில் படியேறும் நிகழ்வும் நடைபெறும்.

அனைவரும் வருக! ஐயன் அருள் பெறும்.

*சுவாமி சரணம்*

குருசுவாமி
ஆதீனகர்த்தா,
தா.வாசுதேவ குரு,
வா.ஜெயவஸ்தாங்க குரு.

(963)



**Cambridge Management College**

U.K யில் உயர் கல்வியைத் தொடர விரும்புகின்றீர்களா? உங்களுக்கான வழிகாட்டல்களை U.K இல் இருந்து வருகை தந்துள்ள ஆங்கிலேயர்களிடம் இருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


# தொழிற்சாலை ஒன்றில் தீ விபத்து

கொச்சிக்கடை பதுவத்த பிரதேசத்தில் அமைந்துள்ள தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இத்தீப்பரவல் நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இத்தீயின் காரணமாக எவரும் உயிரிழக்கவில்லை. காயப்படவும் இல்லை

தீ ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் கொச்சிக்கடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# 200 மாணவர்களுக்கு வாந்திபேதி

வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்ட 200 மாணவர்களில் 20 பேர் பிபில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வாந்திபேதியினால் பாதிக்கப்பட்ட 200 மாணவர்கள் சிகிச்சை பெறுவதற்காக பிபில வைத்தியசாலைக்கு வந்திருந்தனர். அவர்களே வயிற்றோட்டத்தினால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிபில நகரத்திற்கு நீர் விநியோகிப்பதற்கான நீர்த்தாங்கியில் இருந்து விநியோகித்த நீரை பருகியதை அடுத்தே வயிற்றோட்டம் பரவியிருப்பதாக சுகாதார பிரிவினர் தெரிவித்தனர். (அ-2)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுசம் 1<br>உயரம்:- 5'7''<br>கி.பா:-24<br>தகைமை:-Bsc Engineer (Q.S)<br>மொறட்டுவ பல்கலைக்கழகம் B/237 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம் 4<br>உயரம்:- 5'2''<br>கி.பா.-74<br>தொழில்:- சிக்கன கடன் சங்கம்<br>G/402 |
| பிறப்பு:-1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 2<br>உயரம்:-5'8''<br>கி.பா:-22.75<br>தொழில்:- டுபாய் (ஹொட்டல்)<br>B/261 | பிறப்பு:-1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சித்திரை 4<br>உயரம்:- 5'5''<br>கி.பா.-22, 4 இல் செவ்.<br>தொழில்:-MBA, BCA உதவி முகாமையாளர் நிரந்தரம் (தனியார் நிறுவனம்)<br>G/443 |
| பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி<br>உயரம்:-5'5''<br>கி.பா:-49.25, 12இல் செவ்.<br>தொழில்:-இலங்கை மின்சார சபை (லிகிதர்) B/262 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>உயரம்: 5'4''<br>கி.பா: 87<br>தகைமை:-BCA வங்கி (தனியார்)<br>G/444 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கேட்டை<br>உயரம்:-5'6''<br>கி.பா:-56, 2 இல் செவ்.<br>தகைமை:- Bsc பட்டதாரி (Col)<br>கணக்காளர் (மாலைதீவு) B/264 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூசம்<br>உயரம்:-5'5''<br>கி.பா: 28.25<br>தகைமை:-BSC IT<br>G/445 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
செவ்வாய்க்கிழமை விடுமுறை

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் உள்ளூ. மன்றங்களுக்கு 132 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## வடக்கு மாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு மக்களுக்கு சரியான முறையில் சேவைகளை வழங்க வேண்டும் என வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு மற்றும் உள்ளூர் அரச மற்றும் துறைசார் அமைச்சு என்பனவற்றின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண கண்காட்சியை முன்னிட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தொழில்நுட்ப அமர்வினை யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடத்தியது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றங்கள் சரியான முறையில் செயற்பட வேண்டும். மக்களின் தேவைகளை அறிந்து விரைவாக செயற்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மாற்றத்திற்குரிய அபிவிருத்தியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.

மக்களினால்தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படவில்லை என்றால் நோக்கத்தை அடைய முடியாது போய்விடும்.

மேலும் வடக்கு மாகாணத்திலுள்ளஉள்ளூராட்சி சபைகள் தற்போதுபல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி அடைந்து வருகிறது. அத்தோடு அரசாங்கமும் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளுக்காக பல மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளத்திற்கு மட்டும் 600 மில்லியன் ரூபாவினை இந்த வருடத்தில் வழங்கியுள்ளது.

அத்தோடு அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி பணிகளுக்கு அதாவது உள்ளூராட்சி மன்றங்களினூடான அபிவிருத்திக்கு மட்டும் 132 பில்லியன் ரூபாவினை 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த தொகையானது நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களினாலும் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)


ஓம்



**சுவாமியே சரணம் ஐயப்பா**

அகில இலங்கை வடமராட்சி
நவிண்டில் சுந்தர ஐயப்பன் ஆஞ்சநேயர்
திருக்கோயில்

சபரி ஐயன் அடியார்களே! 16.11.2012 வெள்ளி முதல் 14.01.2013 சனி வரை 60 தினமும் அபிஷேகம், பூசை, பஜனை, படிப்பூசை என்பன நடைபெறும். கார்த்திகை உத்தரத்தை முன்னிட்டு உற்சவம், தேர், தீர்த்தம் மகிஷி சம்காரம் மற்றும் விசேட உற்சவம் நடைபெறும். 18 படி விசேட பூசையும் நடைபெறும். 16.11.2012 காலை 9 மணிமுதல் 12 மணிவரை ஐயப்பன் புனித மாலை போடும் நிகழ்வு நடைபெறும்.

"சுவாமி சரணம்"

| | |
|---|---|
| | ஆலயஸ்த்தானீகர் |
| உற்வச கால பிரதமகுருவும் | ஆதீன கர்த்தா |
| ஆலோசகரும் | குருசுவாமி |
| குருசுவாமி | ந.சுந்தரேஸ்வர சர்மா |
| சபரீசகான விநோதன் | சபரிபீடம் |
| தா.வாசுதேவ குருசுவாமி. (964) | நவிண்டில். |





மணமகன், மணமகள்

**1000 பதிவுகளை நோக்கி**

**கல்யாணமாலை**

**KALYANA MALAI**

( சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகிறது



சமய, சமூக வேறுபாடின்றி
பதிவுகள்
நடந்தவண்ணமுள்ளன.

**பதிவுக் கட்டணம்**
**ரூபா 1000 மட்டுமே...!**

செவ்வாய்க்கிழமைகளில்
விடுமுறை

குறிப்பு: பதிவை மேற்கொள்ளும் போது சாதகம். போட்டோ என்பன அவசியம்திருமண தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

தொடர்பு:-021 720 1005

E-mail: kalyanamalai.jaffna@gmail.com




வடமாகாணத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்றிணைந்து முன்னேற்றத்தை நோக்கி என்னும் தொனிப்பொருளிலான கண்காட்சி 2012 நேற்று யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாகவுள்ள யாழ்.மாநகரசபையின் வளாகத்தில் ஆரம்பமானது. இதில் கலாசார முறைப்படி விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய[illegible] மங்கல விளக்கேற்றுவதையும் மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தவைகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன் & என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கணை வீதி புனரமைப்பில் தாமதம் மக்கள் விசனம்




(சிவநகர்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் வடக்கின் துரித மீள்எழுச்சி திட்டத்தினரால் புளியம்பொக்கணை வீதி புனரமைப்பிற்கு ஒழுங்கமைக் கப்பட்ட போதும் வேலைகள் பூர்த்தியடையாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

900 மீற்றர் நீளமான இவ் வீதிக்கு 10.4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது. கடந்த ஆவணி மாதம் இவ்வேலை ஆரம்பிப்பதற்கு வேலை ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆவணி மாதம் இவ்வேலை ஆரம்பிப்பதற்கு வேலை ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்ட போதும் பால ங்கள் கட்டி அரைகுறையான நிலையிலும் கிரவல் நடு வீதிகளில் போடப் பட்டும் உள்ளமையால் மக்கள் சிரமத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக இவ்வீதியின் இருபக்கமும் வயல் வெளியாக இருப்பதால் நீர் வழிந்து ஓடுவதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஏற்கனவே இது தொடர் பாக பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகள் பலமுறை உரியவர்களுக்கு சுட்டிக்காட்டிய போதும் ஒப்பந்தகாரரும் இதற்கு பொறுப்பான அதிகாரி களும் கவனம் எடுப்பதாக தெரியவில்லை.

விரத காலத்தில் நாகதம்பிரான் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் இடர்களை சந்திக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். எனவே, பொறுப்பானவர்கள் இதனை கருத்திற் கொண்டு ஆவன செய்ய வேண்டு மென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

# 50 வீதமான மக்களை நீரிழிவு நோய் தாக்கும்

## சுகாதார அமைச்சு தகவல்

நீரிழிவு நோயினை கட்டுப்பாட் டிற்கு கொண்டுவராது விடின் எதிர் வரும் 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகையில் 50 வீதமானவர்கள் நீரிழிவு நோயி னால் பாதிக்கப்படுவர் என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களில் 10 தொடக்கம் 15 வீதமான மாணவர் கள் நீரிழிவு நோயின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளதாக அவ் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாடசாலை மாண வர்களில் 4 வீதமானவர்கள் அதிக ளவான உடற்பருமனை கொண்டி ருப்பதாக சுகாதார அமைச்சு குறிப் பிட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலுமுள்ள வைத்தியசாலைகளில் நாள் ஒன்றி ற்கு 200 இற்கும் அதிகமான மக் கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப் பட்ட நிலையில் சிகிச்சைக்காக வரு வதாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது. (அ-2)

# கொழும்பு த.சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் 71 ஆம் ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய ஆட்சிக் குழுத்தெரிவும் கடந்த 11 ஆம் திகதி தமிழ்ச் சங்க சங்கரப் பிள்ளை மண்டபத்தில் நடைபெற் றது. இப்புதிய ஆட்சிக்குழுவின் தலைவராக பேராசிரியர் சபா ஜெய ராசா, துணைத் தலைவர்களாக மு.கதிர்காமநாதன், ஜி.இராஜகுலே ந்திரா, அகமது ஜின்னாஹ் ஷரிபுத் தின், ஆ.குகமூர்த்தி, இரா. வைத்தி லிங்கம் கனகரத்தினம், செ. திருச் செல்வன், பொதுச் செயலாளராக ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, நிதிச் செயலாளராக நா. பஞ்சாட்சரம், துணைச் செயலாளராக ப.க. மகா தேவா, துணைநிதிச் செயலாளராக ஜெ.ஜெயசீலன், உறுப்பாண்மை செயலாளராக எஸ்.எழில்வேந்தன், நிலையமைப்புச்செயலாளராகசி.கந்த சாமி, இலக்கியப்பணிச் செயலா ளராக மு.தயாபரன், கல்விக் குழுச் செயலாளராக க.க.உதயகுமார், நூலகக் குழுச்செயலாளராக மா. கணபதிப்பிள்ளை ஆகியோரும் இரு பது ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (அ-9)

# போலி நாணயத்துடன் இருவர் கைதாகினர்

ஒரு தொகுதி போலி நாணயத் தாள்களுடன் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மீகொட பிரதேசத்தில் மோட்டார் வண்டி ஒன்றை சோதனையிடும் போது இப் போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது ஆயிரம் ரூபா போலிநாணயத்தாள்கள் 10 பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-2)

# நீரிழிவு என்ற கொடிய அரக்கனின் கோரப் பிடியிலிருந்து விடுபடுவோம்

நீரிழிவு நோய் ஒரு நீண்ட நாள் நோயாகும். எமது உடலில் இன்சுலின் சுரப்பு குறைவடைவதனாலோ அல்லது இன்சுலின் செயற்பாட்டில் தடை ஏற்படுவதாலோ நீரிழிவு நோய் ஏற்படுகிறது.

இதில் வகை I பொதுவாக சிறு பராயத்தினரில் இன்சுலின் சுரப்பது குறைவடைவதால் ஏற்படுகிறது. இது Insulin dependent or child-hood on set diabetes எனப்படுகிறது.

வகை II பெரும்பாலும் வ..தானவர்களிலும் உடற்பருமன் அதிகமானவர்களிலும் இன்சுலின் சுரப்பு தொழிற்படுவதில் ஏற்படும் பிரச்சினை காரணமாக ஏற்படுகிறது. இது Non-Insulin dependent or adult-hood on set diabetes எனப்படும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின் படி உலகளாவிய ரீதியில் 346 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் 280 மில்லியன் மக்கள் குளுக்கோஸ் சகிப்பாற்றல் குறைவினால் Glucose intolerance பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் முன்னேற்பாடான தடுப்பு, வருமுன் காத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் நீரிழிவினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் இரு மடங்கிற்கும் அதிகமாகும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

மேலும் உலகில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட மக்களில் 1/5 பங்கினர் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் வசிக்கிறார்கள். நீரிழிவு நோய் சம்பந்தப்பட்ட கோளாறினால் ஒவ்வொரு 7 விநாடியும் ஒருவர் மரணமடைகின்றார். நீரிழிவு நோயினால் மரணமடைவோரில் 48 சதவீதமானோர் 60 வயதிற்குட்பட்டவர்களாவர்.

எனவே, இவ்வாறு பல்வேறு பாதிப்புக்களை உருவாக்கி வரும் இந் நீரிழிவு நோயை பற்றி பொதுமக்கள் மத்தியில் வழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இதன் அவசியத்தை உணர்த்த சர்வதேச நீரிழிவு சம்மேளனம் (International Diabetes Federation) உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் 14 ஆம் திகதியை சர்வதேச நீரிழிவு தினமாக 1991 ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடி வருகிறது.

1922 ஆம் ஆண்டு இன்சுலினை கண்டுபிடித்த Frederick Banting என்பவரின் பிறந்த தினம் கார்த்திகை 14 ஆகும். அவருடன் சேர்ந்து இன்சுலினை கண்டுபிடித்த Charles Bost உம் இத்தினத்தில் நினைவு கூரப்படுகின்றார்.

இத்தினமானது சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 200 நிறுவனங்களில் 160 நாடுகளில் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கருப்பொருளை (Theme) மையமாக வைத்து இத் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நீரிழிவு சம்பந்தமான கல்வி புகட்டலும் தடுப்பு முறையும் (Diabetes Education and prevention) என்னும் தொனிப்பொருளுடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தினத்தை குறிக்கும் முகமாக மென் நீல நிற வளையம் பயன்படுத்தப்படுகிறது. இதில் உள்ள மென் நீல நிறம் ஆகாயத்தை குறித்து நிற்கின்றது. இது எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. அத்துடன் United Nation Flag இன் நிறம் நீல நிறமானது.

நீல நிறமான வளைவு சர்வதேச நீரிழிவு சமூகத்தின் ஒற்றுமையையும் அவர்கள் ஒற்றுமையாக இன்சுலின் மருந்தை பாவிப்பவர்களாகவும் இருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

இச் சர்வதேச நீரிழிவு தினத்தில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த நாட்டு மக்களும் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிகைகள் வாயிலாக விழிப்புணர்வு கட்டுரைகளை வெளியீடுதல், விளையாட்டுப் போட்டிகள், கண்காட்சிகள், நடைபவனி, ஓட்டப்போட்டிகள், சைக்கிள் ஓட்டம் போன்ற பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில் இலங்கையிலும் இத்தினத்தை முன்னிட்டு நடைபவனி, விழிப்புணர்வு, கருத்தரங்குகள், கண்காட்சிகள் என பலதரப்பட்ட நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகள் நிகழவுள்ளன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள நீரிழிவு நிலையமும் நீரிழிவு நோயாளர்களுக்கான புதிய உணவு வகைகளை கண்டுபிடிக்கும் முகமாக ஒரு போட்டியை கடந்த மாதம் வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறது.

இன்று வியாழக்கிழமை குருநகர், மானிப்பாய், நீர்வேலி, சாவகச்சேரி, மூளாய் ஆகிய இடங்களை உள்ளடக்கியதாக வாகன பவனியும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வூட்டலிலும் ஈடுபட தீர்மானித்துள்ளது. இதற்காக சகல தரப்பினரதும் ஒத்துழைப்புக்கள் வேண்டப்படுகிறது.

கோ.நந்தகுமார்
விரிவுரையாளர்,
தாதியர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

ஆகவே, நாம் எல்லோரின் ஒத்துழைப்புடனும் நீரிழிவு என்ற கொடிய அரக்கனின் கோரப்பிடியில் அகப்படாமல் எமது மக்களை காக்கும் நற்பணியை இன்றிலிருந்து முன்னெடுப்போம்! என்றும் அதைத் தொடர்வோம்.

# டொச் வங்கிக்கு நட்டம் ஏற்பட இலங்கை அரசாங்கமே காரணம்

## கூட்டுத்தாபன பணிப்பாளர் திட்டவட்டம்

ஹெட்ஜிங் உடன்படிக்கை காரணமாக டொச் வங்கிக்கு ஏற்பட்ட நட்டங்களை ஈடு செய்யும் முகமாக அந்த வங்கிக்கு 60 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ள செயற்பாட்டுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

குறித்த நட்டஈட்டு நடவடிக்கை இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் தமது நிறுவனத்துக்கு பொறுப்பான விடயம் அல்லஎன்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சுசந்த சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் எரிபொருளின் விலையை தளம்பலற்ற நிலையில் வைத்துக் கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு வங்கிகளுடன் ஹெட்ஜிங் உடன்படிக்கையை செய்து கொண்டது.

எனினும் அந்த உடன்படிக்கையை இலங்கை அரசாங்கம் மீறியமை காரணமாக தமக்கு நட்டம் ஏற்பட்டதாக கூறி டொச் வங்கி வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இதனை விசாரணை செய்த அமெரிக்க நீதியாளர் கடந்த மாத முற்பகுதியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 60 மில்லியன் டொலர்களை டொச் வங்கிக்கு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இதற்கு எதிராக மேன் முறையீடு செய்யப்போவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகண்டா ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பு

## பல ஒப்பந்தங்களும் கைச்சாத்து

இலங்கைக்கான நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட உகண்டா ஜனாதிபதி யோவெலி ககுடா முஸேவெணிக்கு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி செயலக முன்றலில் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

உகண்டா ஜனாதிபதிக்கு இராணுவ அணி வகுப்பு மரியாதை மற்றும் மரியாதை பீரங்கி வேட்டுக்கள் 21 தீர்க்கப்பட்டு கௌரவமளிக்கப் பட்டதுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையும் முக்கிய பல ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

காலிமுகத்திடல் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் உகண்டா ஜனாதிபதி குதிரைப்படை அணிவகுப்புடன் ஊர்வலமாக ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து வரப்பட்டார். இராணுவ அணிவகுப்பு மற்றும் மரியாதை பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு உகண்டா ஜனாதிபதிக்கு உயர் கௌரவம் அளிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலக முன்றலில் அமைக்கப்பட்டிருந்த விசேட அரங்கில் உகண்டா ஜனாதிபதி, அந்நாட்டின் முதல் பெண்மணி மற்றும் அந்நாட்டு அமைச்சர்கள் உள்ளடங்கிய தூதுக்குழுவினரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவேற்றார்.

வரவேற்பு நிகழ்வுகளையடுத்து இருநாட்டு தலைவர்களுக்குமிடையில் இரு தரப்பு பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன.

இப்பேச்சு வார்த்தைகளில் அமைச்சர்கள், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும, றிசாத் பதியுதீன், மஹிந்த சமரசிங்க, மஹிந்த யாப்பா அபேவர்த்தன, டி.பி. ஏக்கநாயக்க, சம்பிக்க ரணவக்க, பிரதியமைச்சர் சரத் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

உகண்டா நாட்டின் சார்பில் அந்நாட்டு ஜனாதிபதி யோவெரி ககுடா முஸேவெனியுடன் முதல் பெண்மணியும் அமைச்சருமான திருமதி ஜெனட் கே.முஸேவெனி மற்றும் அந்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கைக்கும் உகண்டாவுக்குமிடையிலான நாற்பது வருடகால நல்லுறவைச் சுட்டிக்காட்டியதுடன் ஜனாதிபதி பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக உகண்டாவுக்கு விஜயம் செய்திருந்ததையும் நினைவூட்டினார். இரு தரப்பு பேச்சுவார்த்தையையடுத்து இரு நாடுகளுக்கிடையிலான முக்கிய ஒப்பந்தங்கள் சில கைச்சாத்திடப்பட்டன.

இரு நாட்டு தலைவர்களினதும் முன்னிலையில் இலங்கையின் சார்பில் அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ், டி.பி. ஏக்கநாயக்க, பிரதியமைச்சர் சரத் அமுனுகம ஆகியோரும் உகண்டா சார்பில் அந்நாட்டின் முதல் பெண்மணியும் அமைச்சருமான ஜெனட் கே. முஸேவெனியும் ஒப்பந்தங்களில் கைச் சாத்திட்டனர். இலங்கை உகண்டா தொழிற் பயிற்சி தொழில்நுட்ப நிலைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் உகண்டா நாட்டின் முதல் பெண்மணியும் அமைச்சருமான ஜெனட் கே.முஸேவெனி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறை தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் அந்நாட்டின் முதல் பெண்மணியும் அமைச்சருமான ஜெனட் கே.முஸேவெனி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இரு நாடுகளுக்கிடையிலான இரு தரப்பு அரசியல் ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அமைச்சர் ஜீ.எல். பீரிசும் அந்நாட்டு முதல் பெண்மணியும் அமைச்சருமான ஜெனட் கே.முஸேவெனி ஆகியோர் கைச்சாத்திட்டதுடன் இரு நாடுகளுக்கிடையிலான கலாசார ஒத்துழைப்புக்கான உடன்படிக்கையில் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்கவும் அந்நாட்டின் முதல் பெண்மணியும் கைச்சாத்திட்டனர். (அ-2)

# கந்தசஷ்டி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் ஆலய நந்தன வருட கந்தச்ஷ்டி உற்சவம் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை சூரசங்கார உற்சவம் ஈறாக ஐந்து தினங்கள் நடைபெற்று 19 ஆம் திகதி திங்கட்கிழமை தெய்வயானை அம்மன் திருமண உற்வசமும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# கைதிகள் தமிழக முதல்வருடன் தொலைபேசியில் பேசியுள்ளனர்

## விசாரணைகளில் தெரிய வந்தது

வெலிக்கடைச் சிறைச்சாலை கைதிகளுடன் தொடர்புகளைப் பேணிய நபர்கள் பற்றிய தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

சிறைச்சாலையில் கண்டுபிடிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி, சிம் அட்டைகளின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைத்துள்ளன. கைதிகள் அடிக்கடி தொடர்புகளை பேணிய அரசியல் வாதிகள், வர்த்தகர்கள் மற்றும் ஏனைய தரப்பினர் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன.

போலியான அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி இந்த சிம் அட்டைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. வெலிக்கடைச் சிறைச் சாலைக்கு அருகாமையில் உள்ள தொலை பேசி கோபுரங்களின் தரவுகள் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளன. பாதுகாப்பு தரப்பினர் நடத்திய விசாரணைகளின் போது இந்திய கைதிகளிடமிருந்தும் சில செல்லிடப் பேசிகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் ஊடகங்களுக்கு தகவல்களை பரிமாறியுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் கைதிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு பேணப்பட்டு வந்ததாக குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு கைதிகளுடன் தொடர்புகளை பேணிய அதிகாரிகள் ஏற்கனவே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சுகாதாரத்துறையிலேயே பாலியல் துன்புறுத்தல்

## அதிகம் என்கிறார் அமைச்சர் மைத்திரிபால

(கொழும்பு)

இலங்கையில் பெண்கள் அதிகளவில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படும் துறையாக சுகாதாரத்துறை அமைந்துள்ளது என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியுள்ளார். சுகாதார அமைச்சு மற்றும் அதன் துணை நிறுவனங்களில் கடமையாற்றி வரும் பெண்கள் அதிகளவில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றனர்.

நிறுவனங்களில் பணியாற்றி வரும் அதிகாரிகளினால் பெண்கள் இவ்வாறு பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றனர்.

ஓர் வைத்தியசாலையில் கனிஷ்ட நிலை பெண் சிற்றூழியர் ஒருவர் தமது பாலியல் இச்சைக்கு இணங்க மறுத்த காரணத்தினால் அவரை பிரேத அறையில் கடமைக்கு அமர்த்தியுள்ளனர். குறித்த பெண் பிரேத அறையில் மயங்கி விழுந்துள்ளார்.

விழித்தெழுந்து பார்த்த போது உடம்பில் ஆடையின்றி பல தடவைகள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை குறித்த பெண்ணே என்னிடம் முறைப்பாடு செய்தார். எனினும் எழுத்து மூலம் எவரும் முறைப்பாடுகளை செய்வதில்லை.

பெண் வைத்தியர்கள் கூட இடமாற்றம் போன்ற தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள உயர் அதிகாரிகளின் பாலியல் இச்சைகளை பூர்த்தி செய்ய நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். உயர்பதவி வகிக்கும் பெண்கள் முதல், கடைநிலை பணிகளில் ஈடுபடும் பெண்கள் வரையில் பாலியல் ரீதியான வன் கொடுமைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (அ-2)

# தெரு மின்விளக்குகளை மின்சார சபை பராமரிக்கும்

## மன்னார் நகரசபை தெரிவிப்பு

மன்னார் நகர சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து தெரு மின்விளக்குகளையும் பராமரிக்கும் பணி இலங்கை மின்சார சபையிடம் விரைவில் கையளிக்கப்படவுள்ளதாக மன்னார் நகர சபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் சுமார் 600 இற்கும் மேற்பட்ட தெரு மின்விளக்குகள் காணப்படுகின்றன.

குறித்த மின் விளக்குகள் அண்மையில் பொருத்தப்பட்ட நவீன ரக விளக்குகளாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மின் விளக்குகள் நன்கு பராமரிக்கப்பட்டு பொது மக்களுக்கு அதி உச்ச பயனை கொடுக்கும் நோக்குடனேயே மின்சார சபையிடம் தெரு மின்விளக்குகளை பராமரிக்கும் பொறுப்பு வழங்கவுள்ளது என அவர் தெரிவித்தார். (அ-2)

# தேர்தல் ஆணையாளர்களின் சந்திப்பு இன்று கொழும்பில்

(கொழும்பு)

அனைத்து உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கும் இன்றைய தினம் வியாழக்கிழமை கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து பேசப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்கள் ஆணையாளர்களுடன் இடம்பெறவுள்ள விசேட சந்திப்பின் பொருட்டு அவர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2)




யாழ்ப்பாணம் எவர்சைன் முன்பள்ளியில் சிறுவர் உலகத்தின் 7 ஆவது வருடாந்த கண்காட்சி கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர்களின் கண்காட்சிகளையும் அவற்றை விருந்தினர்கள் உட்பட்டோர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

102

ஆங்கிலேயரைச் சூழ்ந்து கோபாவேசத்துடன் இலங்கை மக்கள்



கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இத் துறைமுகத்தை கைப்பற்றினால், இந்து சமுத்திரப் பிரதேசங்களைக் கட்டுப்படுத்துவது சுலபம் என்று எண்ணின. 1672 ஆம் ஆண்டு அட்மிரல் டி லாஹோ தலைமையில் பிரான்சுப்படை திருகோணமலையைக் கைப்பற்றிக்கொண்டது. ஒல்லாந்தர் உடனடியாக கொட்டியாரக் கோட்டையை கைவிட்டுவிட்டு திருகோணமலையை மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர். திருகோணமலைத் துறையினுள் அமைந்திருந்த இரு தீவுகளை கைப்பற்றிய டி லாஹோ அங்கு தங்கி கண்டி மன்னனிடம் தொடர்பினை ஏற்படுத்தினான். பிரான்சியருக்கு திருகோணமலை, கொட்டியாரம்,மட்டக்களப்பு, ஆகிய துறைமுகங்களைத் தருமாறும் அதற்குப் பதிலாக படையுதவி மன்னனுக்கு கிடைக்கும் எனவும் அறிவித்தான். பிரான்சியரின் உதவி தேவையில்லை என மன்னன் அறிவித்தான். அவ்வாறிருந்தும் பிரான்சியா மீண்டும் டி லா நேறோல் என்பவனை அனுப்பி பேரம்பேச முயன்றனர். நேறோலின் ஆத்திரமூட்டும் பேச்சால் கோபமடைந்த இராஜசிங்கன் அவனை சாட்டையால் அடித்ததோடு , சங்கிலிகளால் பிணைத்துச் சிறையிலிட்டான். ஒல்லாந்தரால் பிரான்சியப்படை நிர்மூலமாக்கப்பட்டது.

1672 ஆம் ஆண்டு கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஒல்லாந்தரை இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலிருந்நது துரத்தும் நோக்குடன் ஆங்கிலேயருடன் இந்தியாவிலிருந்த தன் உறவினர் மூலம் உதவிகோரினான். அக் கால கட்டத்தில் ஆங்கிலேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் சமாதானமும் நேச உறவும் நிலவியதால் ஆங்கிலேயரால் கண்டி மன்னனுக்கு உதவ முடியவில்லை. ஆனால், கண்டி மன்னனின் கோரிக்கை அவர்களுக்கு எற்படுத்தித் தந்த சந்தர்ப்பத்தையும் இழக்க விரும்பவில்லை. ஜோன் பைபஸ் என்பவனைக் கண்டிக்கு தூதுவனாக அனுப்பினர். "தற்போதைய நிலையில் படை உதவி அளிக்க முடியாதிருப்பினும் வியாபாரத் தொடர்பை வைத்துக்கொள்ளலாம், பின்னர் படை உதவி புரிவோம்" என ஜோன் பைபஸ் கூறினான். இராஜசிங்கன் படை உதவி இல்லாவிட்டால் வியாபார உரிமையும் இல்லையென அதனை மறுத்துவிட்டான்.

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

## ஆங்கிலேயர் காலம்


### ஆங்கிலேயர் வருகை

ஒல்லாந்தருடன் செய்து கொண்ட உடன்படிக்கை தக்கவிதத்தில் கைக்கொள்ளப்படாமையால், இராஜசிங்கன் கடும் ஏமாற்றம் அடைந்தான். தன்னைக் கடன்காரன் ஆக்கிவிட்ட ஒல்லாந்தரை பழிவாங்கும் எண்ணம் மனதில் பதிந்திருந்தது. ஒல்லாந்தரை இங்கிருந்து அகற்றுவதற்காக இன்னோர் அந்நிய நாட்டின் உதவியை நாடும் எண்ணம் எழுந்தது. அதற்கான வாய்ப்புக் கிட்டியது. இந்து சமுத்திரப் பரப்பில் கறுவா முதலான வாசனைத் திரவியங்களின் வர்த்தகத்தில் ஐரோப்பிய நாடுகள் போட்டியிட்டன. அவ்வகையில் ஆங்கிலேயர் கவனம் செலுத்தி வந்தனர். 1659 ஆம் ஆண்டில் பேர்சியா மேச்சன்ற் என்ற ஆங்கிலேயக் கப்பல் ஒன்று மாலதீவுக்கு அருகில் உடைவுற்றது. அதனால், அக்கப்பற் குழுவினர் மாலதீவுப் படகுகளை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர். அப்படகுகளில் இரண்டு இராஜசிங்கனுக்குச் சொந்தமான கற்பிட்டித் துறையை வந்தடைந்தன. இன்னொன்று ஒல்லாந்தர்களுக்குச் சொந்தமான மன்னாரைச் சென்றடைந்தது. கற்பிட்டித்துறையைச் சென்றடைந்த படகுகளில் இருந்த 26 ஆங்கிலேயர்களை இராஜசிங்கனின் திசாவை கைது செய்து கண்டிக்கு அழைத்துச் சென்றது. கண்டி மன்னன் அவர்களுடன் கலந்துரையாடி, விரைவில் விடுவிப்பதாக அறிவித்ததுடன் அவர்களுக்கான வசதிகளையும் செய்துகொடுத்து காலவரையறையின்றி கைதியாக பாதுகாப்பில் வைத்தான்.

கி.பி.1600 ஆம் ஆண்டு ஆன் என்ற ஆங்கிலேயக்கப்பல் ஒன்று கொட்டியாரில் புயல் ஒன்றினால் ஏற்பட்ட பழுதுகளைத் திருத்துவதற்காக வந்து தங்கியது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியுடன் தொடர்பை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையுடன் அக்கப்பலில் இருந்தவர்களை அழத்து வருமாறு இராஜசிங்கன் ஒரு திசாவையை கொட்டியாரத்துக்கு அனுப்பி வைத்தான். அக்கப்பலின் தலைவராக இருந்த றொபேட் நொக்ஸ் தான் உண்ணாட்டுக்கு நீண்ட தூரம் வரமுடியாதென்றும், அவசியமாயின் கடற்கரையில் சந்திப்பதாகவும் தனது மகன் இளைய றொபேட் நொக்ஸின் மூலம் தகவல் அனுப்பி வைத்தான். செய்தியோடு றொபேட் நொக்ஸ் கரைக்கு வந்ததும் அவனையும் அவனோடு வந்த குழுவையும் கைது செய்த திசாவை அவர்களை கண்டிக்கு அழைத்துச் சென்றான். அவர்களைப் பிணையாக வைத்துக்கொண்டு பிரித்தானிய அரசுடன் தொடர்பு கொள்ள விரும்பிய போது கப்பல் தலைவன் நொக்ஸ் ஒப்புக் கொள்ளவில்லை. இராஜசிங்கனும் கைதான 16 ஆங்கிலேயர்களை விடுவிக்கவில்லை. காத்திருந்து ஏமாந்த கப்பல் புறப்பட்டுச் சென்றது. றொபேட் நொக்ஸூம் ஏனையோரும் சிறை வைக்கப்பட்டனர். பின்னர் றொபேட் நொக்ஸூம் இன்னொரு ஆங்கிலேயனான ஸ்ரீபன் ருத்லாண்ட என்பானும் தப்பிச்சென்று ஒல்லாந்தரிடம் அரிப்பில் தஞ்சம் புகுந்தனர். அங்கிருந்து பத்தேவியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

1600 ஆம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனி உருவாக்கப் பட்டது. அது இந்தியாவின் பல பகுதிகளிலும் கோட்டைகளையும் பண்டக சாலைகளையும் நிறுவி தன்னை பலப்படுத்திக் கொண்டது. சூரத் ஆக்ரா, அகமதாபாத், பம்பாய், மசூலிட்டிப்பட்டினம், சென்னை ஹரிஹரபுரம்கோல்கொண்டர், ஹுக்லி, பட்னா, கல்கத்தா, கோவிந்தபுரம் ஆகிய இடங்களில் இவை அமைந்தன. இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கம் இருந்தபோது பிரான்சு தேசம் அதைப்போல இந்தியாவில் ஆதிக்கம் பெற விரும்பி, புதுச்சேரி, சந்திரநகர் ஆகிய பகுதிகளில் பண்டக சாலையை அமைத்துக்கொண்டது.

இரண்டு வல்லரசுகளும் இந்தியாவில் தம்மை ஓரளவு நிலை நாட்டிக் கொண்ட பின்னர் இலங்கையில் கவனத்தைத் திருப்பின. அவர்களுடைய கவனம் முதலில் திருகோணமலைத் துறைமுகத்தில் படிந்தது.




ஆங்கிலேய ஆக்கிரமிப்புச் சின்னமாக இப்பொழுதும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# சிறுவர் அரங்கம்

281

## விதிமாறுமா?



ஒரு கிராமத்தில் நஞ்சப்பன் என்ற மாடு மேய்க்கும் பையன் இருந்தான். தினமும் ஆடு, மாடுகளை மேய்க்க அவன் எங்காவது ஓட்டிச்செல்வான்.

ஒருநாள் ஊருக்கு வெளியே ஒரு பாழடைந்த நந்தவனத்தில் அவன் ஆடு, மாடுகளை ஓட்டிச் சென்றான். ஒரு காலத்தில் அங்கு நல்ல உயர் ஜாதிப்பழ மரங்களும் புஷ்பச் செடிகளும் இருந்தன. ஆனால், அவை எல்லாம் அழிந்து புல்காடாக வளர்ந்து கிடந்தது. ஊரிலுள்ள மற்றவர்களும் அங்குதான் ஆடு, மாடுகளை மேய்ப்பது உண்டு. எனவே அங்குதான் நஞ்சப்பன் போனான்.

அவன் ஆடு, மாடுகளை அங்கு மேய்வதற்கு விட்டுவிட்டு அந்த நந்தவனத்தைச் சுற்றி வரலானான். அவனுக்குப் பொழுதே போகவில்லை. அங்கும் இங்கும் திரிந்தும் அவன் மனம் நிம்மதி அடையவில்லை. ஒரு கல்லை எடுத்து எதிரிலிருந்த வண்டுக்


### அம்புலிமாமா கதைகள்

குக் குறிவைத்து அடித்தான். அது பொத்தென விழுந்து இறந்தது. அதன் உடலைத் தூக்கி அவன் தூர விட்டெறிந்தான். அது சற்றுத் தொலைவிலிருந்த ஒரு மேட்டின் மீது விழுந்தது.

அப்போது ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. இறந்த வண்டின் உடல் அந்த மேட்டில் விழுந்ததுமே அதற்கு உயிர் வந்து விட்டது. அது பறந்து ஓடிப் போயிற்று. அதைக்கண்ட நஞ்சப்பன் வாயடைத்து நின்றான்.

இரண்டொரு நிமிடங்கள் கழிந்தன. அவன் அங்கிருந்து அந்த மேட்டை நோக்கி ஓடினான். அங்கு குனிந்து கவனிக்கலானான். அப்போது அங்கு அவன் ஒரு புதுகரமான இலைகளைக் கண்டான். அவை ஏனைய இலைகளைப் போலல்லாமல் விசித்திரமான வடிவத்தைக் கொண்டிருந்தன. அந்த இலைகளின் நறுமணம் நாலாபுறத்திலும் வீசியது.

அந்த வாசனை பட்டதும் வண்டுக்கு உயிர் வந்திருக்க வேண்டுமென நஞ்சப்பன் தெரிந்து கொண்டான். அது சஞ்சீவினி மூலிகையாக இருக்கலாமென



நினைத்து அதை நன்கு அடையாளம் பார்த்து வைத்துக் கொண்டான்.


அவன் தான் ஊகித்தது சரிதானா எனப்பார்க்க அங்கேயே சற்றுத்தொலைவில் இறந்து கிடக்கும் ஓர் அரணையை எடுத்து வந்து அந்த மேட்டின் மீது போட்டான். மறுநிமிடமே அந்த அரணை உயிர்பெற்று வளைந்து நெளிந்து ஓடியது. அதைக்கண்டு நஞ்சப்பன் தன் ஊகம் சரியேயென அறிந்துகொண்டான்.

அவன் இதை என் நண்பர்களிடமும் மற்றவர்களிடமும் சொன்னான். அவர்களோ அவனைக் கேலி செய்தனர். போடா பைத்தியம். சஞ்சீவினி இலை இங்கே ஏது? நீ அனுமாரா அதைக்கண்டு பிடிப்பதற்கு? அவர்கூட அது இருக்கும் மலையைத்தான் தூக்கி வந்தார். இலைகளைப் பார்க்கக் கூடவில்லை என்றெல்லாம் கூறினர். நஞ்சன் தன்னை மீறி எழுந்த ஆத்திரத்தையும் கோபத்தையும் அடக்கிக்கொண்டான்.

சில நாட்கள் கழிந்தன. அந்த ஊர் மணியகாரர் ஒருநாள் அதிகாலையில் இறந்து போய்விட்டார். அவர் பணக்காரரர். அதோடு பெரிய கொடையாளி. பல கோவில்கள், சத்திரங்கள் கட்டி, குளங்கள் வெட்டி மக்களுக்குப் பயன்தரும் பல வசதிகளைச் செய்து கொடுத்திருந்தார். ஆனால் சிறிது நாட்களாக நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருந்தார். வைத்தியர்கள் அவருக்குச் சிகிச்சை செய்தனர். ஆயினும் எவ்விதப் பயனும் இல்லை. கடைசியில் அவர் முடிவு இப்படியாயிற்று.

அவர் வீட்டின் முன்பு பெரிய கூட்டம் கூடிவிட்டது. பலர் பல விதமாகக் கூறினர். சிலர் விதியை நொந்தனர். வேறு சிலர் அவரது உடல் நோயை வைத்தியர்கள் சரியாகக் குணப்படுத்தவில்லை என்றனர். இப்படியாக ஒவ்வொருவரும் ஏதோ வாய்க்கு வந்தபடி சொல்லிக் கொண்டேயிருந்தனர்.

நஞ்சப்பன் அந்தச் சமயத்தில் அவ்வழியே சென்று கொண்டி



ருந்தான். அவன் அக்கூட்டத்தினரைப் பார்த்து மணியகாரரை உயிர்ப்பிக்க வழி இருக்கிறது. இவ்வூருக்கு வெளியேயுள்ள நந்தவனத்தில் சஞ்சீவினி மூலிகை இருக்கிறது என்று சொல்லிதான் அதை எப்படிக் கண்டு கொள்ள முடிந்தது என்பதையும் கூறினான்.

அவன் கூறியதைக்கேட்டு அங்கு கூடியிருந்தவர்கள் அவனை விநோதமாகப் பார்த்தனர். யாருமே அதை நம்பவில்லை. என்னடா உளறுகிறாய்? என்றான் ஒருவன். டேய் விடுடா அவனை! அவன் பைத்தியக்காரன் போல் இருக்கிறது என்றனர் சிலர். சற்றுப் பேசாமல் இருங்கள்! என்று அவர்களை அடக்கிய உள்ளூர் வைத்தியர் இவன் சொன்னதை சோதித்துப் பார்த்துவிடலாமே. இவனுடன் நான்கு அல்லது ஐந்துபேர் அந்தப் பாழடைந்த நந்தவனத்திற்குச் சென்று மூலிகை இலைகளைக் கொண்டு வாருங்கள். நான் முயற்சி செய்து பார்க்கிறேன் என்றார்.

வைத்தியர் சொற்படி சிலர் ஒருவேளை உயிர்வரலாமோ என்ற நம்பிக்கையுடன் நஞ்சப்பனை அழைத்துக் கொண்டு அந்தப் பாழடைந்த நந்தவனத்திற்குச் சென்றனர். தினமும் அந்த மூலிகையை அடையாளம் கண்டுகொள்ளும் அவனால் அன்று ஏனோ அதனைக் கண்டு பிடிக்க முடியாமல் போய்விட்டது. நந்தவனம் முழுவதும் ஓடி அலைந்ததுதான் மிச்சம்.

அவனோடு வந்தவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. ஏய் எங்களை ஏய்க்கவா பார்க்கிறாய்? எனக்கூறி அவன் காதைப் பிடித்து திருகி முதுகில் ரெண்டு வைத்துவிட்டுச் சென்றனர்.

**தினமும் கண்ணில் படும் மூலிகை அன்று மட்டும் எங்கே போயிற்று?**

அது இருந்த இடத்தில்தான் இருந்தது. மணியகாரர் பிழைக்க வேண்டும் என எழுதி இருக்கவில்லை. அதனால்தான் நஞ்சப்பன் அதே மூலிகைகளின் முன் நின்றிருந்தும் அவனால் அதனை அடையாளம் கண்டு கொள்ளமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத இராசி பலன்

## 16.11.2012–15.12.2012




மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை,புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்.

**திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி!**

மற்றவர்கள் மனம்நோகாமல் பேசும் மிதுன இராசி நேயர்களே!

உங்கள் மனதுக்குப் பிடித்ததை உடனே செய்யவேண்டும் என்று வற்புறுத்துவீர்கள். மற்றவர்கள் கருத்துக்களை கேட்டுக்கொண்டாலும், முடிவில் உங்கள் மனம் சொல்லியபடியே நடப்பீர்கள். திடீர் திடீரென நட்பு பகையாகிவிடலாம். அதே நேரத்தில் பகைவர்கள் உங்களுக்கு நண்பர்களாக மாறி பல காரியங்களை முடித்துக் கொடுப்பர். இப்படித்தான் வாழவேண்டும் என்று நியதி இல்லாமல், எப்படி வாழ்ந்தாலும் சரி என்று எண்ணுபவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, மாதத் தொடக்கத்திலேயே கேந்திராதிபத்தியம் பெற்ற குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். கூட்டாளிகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

இராகு கேதுக்களின் பெயர்ச்சியும் இந்த மாதம் இருப்பதால் எதிர்பார்ப்புகள் பலவும் நிறைவேறும். இல்லத்தில் சுபகாரிய பேச்சுக்கள் கைகூடி வரும். பஞ்சம இராகுவும், 11 இல் கேதுவும் பலன்களை அள்ளி வழங்கப் போகிறது. நெஞ்சம் நெகிழும் விதத்தில் இனி உங்கள் வாழ்க்கையும் அமையப் போகிறது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக விரயஸ்தானத்தில் இருந்த கேது எதிர்பாரத விரயங்கள் பலவற்றையும் கொடுத்திருக்கலாம். அவற்றை ஈடுசெய்யும்

## நெஞ்சம் மகிழும் விதத்தில் வாழ்க்கை அமையும்

விதத்தில் புதிய தொழில் வாய்ப்புகள் வந்து சேரும். என்ன இருந்தாலும் 5ஆம் இடத்தில் இராகு சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் கொஞ்சம் கண்காணிப்புத் தேவை. பிரச்சினைகளைச் சுமந்துகொண்டு பிள்ளைகள் வந்து சேரலாம்.

மாதத்தொடக்கத்தில் புதனும் சுக்கிரனும் பரிவர்த்தனை பெற்றிருப்பதால் எதற்கும் பயப்படத் தேவையில்லை. அரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். அனைத்து காரிங்களும் நல்ல விதமாக நடைபெற இராகுகேது பரிகாரம் செய்வதோடு முருகப்பெருமான் வழிபாட்டையும் முறையாக மேற்கொள்வது நல்லது.

**சுகம்தரும் சுக்ர பெயர்ச்சி!**

பஞ்சம ஸ்தானத்தில் நவம்பர் 17 முதல் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். டிசெம்பர் 12 முதல் விருச்சிகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இந்த இரு பெயர்ச்சிகளும் சுக்ரனுக்கு வலிமையூட்டும் பெயர்ச்சிகளாகும். சுபச் செய்திகள் வந்துசேரும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாவது மட்டுமல்லாது, எதிர்காலத்திற்காக சேமிக்கும் எண்ணமும் மேலோங்கும். விருச்சிகத்தில் டிசெம்பர் 5 இல் வரும் புதனால் புதசுக்கிர யோகமும் செயல்படப் போகிறது. வரவு திருப்தி தரும்.

**நலம்தரும் இராகு கேது பெயர்ச்சி!**

பஞ்சம ஸ்தானத்தில் இராகுவும் 11இல் கேதுவும் டிசெம்பர் 2ஆந் திகதி அன்றைக்கு வருவதன் விளைவாக வெளிநாட்டு வாய்ப்புகள் கைகூடி வரும். விளையாட்டாக பேசிய செயல் வெற்றிகரமாக முடியும். புதிய ஒப்பந்தங் களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். இளைய சகோதர வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும் எவையெவையெல்லாம் பாதியில் நின்றதோ, அவை படிப்படியாக நடைபெறத் தொடங்கும். திடீர் கல்யாணங்கள் கூட குடும்பத்தில் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

**அஷ்டமத்து செவ்வாயின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 15 ஆந் திகதி அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போவதால் எதிலும் கூடுதலாக கவனம் செலுத்துவது நல்லது. வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. இடம், பூமிகளை வாங்கினால், பத்திரப்பதிவுகளை சரிபார்த்துக்கொள்வது நல்லது. சகோதர ஒற்றுமை பலப்பட அங்காரக வழிபாடு செய்வது நல்லது.

இந்த மாதம் அனுமன் வழிபாட்டை மேற்கொண்டால், அல்லல்கள் தீரும்.

இந்த மாதம் இராசிநாதன் புதன் பரிவர்த்தனை யோகம் பெற்று தொடங்குவதனால், குடும்பத்தில் மகிழ்சி கூடும். கொடுக்கல், வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும். மாமன், மைத்துனர் வழியில் மங்கலச் செய்திகள் மனதிற்கு இதமளிக்கும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை கூடும். மாதத்தின் மையப்பகுதியில் பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வரன் தேடும் முயற்சிகளில் வெற்றிகாண இயலும். இம்மாதம் கரங்குளிர பொருள் வரும் வகையில் சேமிப்பு கள் கூடும். பொதுவாழ்வில் பொறுப்புகள் வந்து சேரும். தெய்வ வழிபாடு திருப்தி தரும்.

# சிவல்புரி சிங்காரம்

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

**உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்!**

பிறரக்காக பாடுபட்டு பெருமை சேர்க்கும் கடக இராசி நேயர்களே!

சந்திரனின் ஆதிக்கம் பெற்ற உங்களுக்கு சிந்தனை ஆற்றல் அதிகமாகவே இருக்கும். வந்தவர்களை உபசரிப்பதில் வல்லவர்களாகவும், வாயாடும் நபர்களை சமாளிப்பதில் கெட்டிக்காரர்களாகவும் விளங்குவீர்கள். மற்றவர்கள் எல்லாம் பொழுது போகவில்லை என்பார்கள், ஆனால், நீங்கள் பொழுது போதவில் லையே என்பீர்கள். நண்பர்கள் அதிகம் பெற்றிருப்பவர்களின் வரிசையில் முதலிடத்தைப் பெற்றிருப்பவர்களும் நீங்கள்தான்.

உங்களுக்கு இந்த கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது 4இல் சனி, அர்த்தாஷ்டம சனியாக விளங்கி அல்லல்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும். வரவைக் காட்டிலும் செலவுகள் கூடலாம். வாய்ப்புகள் வரும்போது உபயோ

## வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படப்போகும் மாதம்

கப்படுத்தாமல் விட்டுவிட்டால், மறுபடி வருவது அரிது. தொழில் சம்பந்தமாக இணைந்திருந்த கூட்டாளிகள் விலகினாலும், குருவின் வக்ர இயக்கத்தின் காரணமாக புதிய கூட்டாளிகள் வந்து இணையச் செய்யும்.

மாதத் தொடக்கத்திலேயே சந்திரன் நீச்சம் பெற்று, குருவின் பார்வையால் குருச்சந்திர யோகத்தைக் கொடுக்கப்போகிறார். இதன் விளைவாக மங்கல ஓசைகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். வீட்டுப்பிரச்சினைகள் புதிது புதிதாக முளைத்தாலும், பழைய பிரச்சினைகள் முடிவுக்கு வந்து மகிழ்சியை வழங்கும்.

உச்ச சனியின் ஆதிக்கம் 4இல் இருப்பதால் வாகன மாற்றம், இடமாற்றம், வீடுமாற்றங்கள் தானாகவே வந்து சேரலாம். வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்வதுடன், விழிப் புணர்ச்சியுடன் செயல்படுவதுதான் நல்லது. இராகுகேது பெயர்ச்சியும் ஓரளவு நன்மையை வழங்கும் விதத்தில் இருக்கிறது. 4இல் இராகு 10இல் கேது வருவதால் தொழில் வாய்ப்பை ஒருபுறத்தில் கொடுக்கும். பணியாளர்களின் தொல்லையை மற்றொரு புறத்தில் வழங்கும்.

அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் முடியும்வரை சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபாடு செய்வ தோடு, சனிகவசம் பாடுங்கள். அனுமனையும் வழிபாடு செய்யுங்கள். இனிய வாழ்விற்கு அடித்தளமிடுவதற்கு வழியாக அமையும்.

**சுகந்தரும் சுக்ர பெயர்ச்சி!**

சுக்ரன் இந்த மாதம் நவம்பர் 17 ஆம் திகதி துலாம் இராசியிலும், டிசெம் பர் 12ஆந் திகதி விருச்சிக இராசியிலும் சஞ்சரிக்கப் போகிறார். துலாத்தில் சுக்கிரன் சஞ்கரிக்கும்போது விரயங்கள் கூடும். எனவே கவனம்தேவை. விருச்சிகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும்போது விவாக செய்தி வீட்டுக்கு வந்து சேரும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

**புதன் பெயர்ச்சியும் புதிய திருப்பமும்!**

டிசெம்பர் 5ஆந் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 3,12க்கு அதிபதி 5இல் சஞ் சரிக்கும் பொழுது பிள்ளைகளின் கல்யாண கனவுகள் நனவாகும். உடன் பிறப்புகளின் ஒத்துழைப்போடு உங்கள் இல்லத்தில் நடபெறும் சுபகாரியத்தை முடித்து வைப்பீர்கள். பயணங்களால் பலன் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

**நலம் தரும் இராகு கேது பெயர்ச்சி!**

டிசெம்பர் 2ஆந் திகதி 4ல் இராகுவும் 10ல் கேதுவும் சங்சரிக்கப் போகிறார்கள்.எனவே அலைச்சல் அதிகரிக்கும். ஆனாலும் ஆதாயம் கிடைக்கும். வீடு வாங்கும் யோகமும், நாடு விட்டு நாடு செல்லும் யோகமும் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் சலுகைகள் கிடைப்பதோடு, உத்தியோக உயர்வும் கிடைக்கும். 10ஆம் இடத்து கேது புதிய பொறுப்புகளையும், பதவிகளையும் வரும் வாய்ப்பை உருவாக்கும். அர்த்தாஷ்டம இராகு என்பதால் முறையாக சர்ப்ப சாந்தி செய்வது சந்தோசத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

வரும் டிசெம்பர் 15 ஆந்திகதி மகரத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இந்த உச்சம் பெற்ற செவ்வாய் உங்கள் வாழ்க்கையில் மறுமலர்ச் சியை ஏற்படுத்தப் போகிறது. வழக்குகளில் வெற்றி, வருங்கால நலன் கருதி




எடுத்த முயற்கிகளில்அனுகூலம், இல்லத்தில ஒற்றுமை புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு, புதிய சொத்து சேர்க்கை ஆகியவைகளை வழங்கும். முருகன் வழிபாடு இந்தக் காலத்தில் முன்னேற்றம் தரும்.

துர்க்கை வழிபாட்டின் மூலம் துயரங்களை தீர்த்துக்கொள்ளலாம்

அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்ல வேண்டிய மாதமாகும். பக்கத்து வீட்டாரின் பகையை வளர்த்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது. தூர தேசத்திலிருந்து வரும் தொலைபேசி வழி தகவல் மகிழ்ச்சியை தரும். கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் விருப்பங்கள் நிறைவேறும். மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. இராகு, கேதுக்களுக்கு பரிகாரம் செய்வது நல்லது. மாத கடைசியில் விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து சேருவர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையிலுள்ள இராணுவ அதிகாரிகள் மூவரை வெளிநாடுகளில் பிரதித் தூதுவர்களாக நியமிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் இந்தக் திட்டத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால், பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் இந்த நியமனங்களை மேற் கொள்ள வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த மூன்று இராணுவ அதிகாரிகளில் இரண்டு பேர் இறுதிப் போரில் முக்கிய பங்காற்றியவர்கள். ஆனால், மூவருமே பாதுகாப்புச் செயலர் கோத்தபாயராஜபக்சாவுக்குவுக்கு நெருக்க மான

இப்போது அவருக்கு துணையாகவே மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண நியிமிக்கப்படவுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிப்போரில், 53வது டிவிஷனுக்கு தலைமை தாங்கி முகமாலையில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையும் முன்னகர்வுகளை மேற் கொண்டவர் இவர்.

அதன் பின்னர் வன்னிப் படைகளின் தளபதியாகவும் இருந்தவர்.

போர்க்குற்றச்சாட்டு என்ற சர்ச்சைகளிலும் சிக்கியவர். கோத்த பாய ராஜபக்சவிற்கு நெருக்கமான இவர், தற்போது இராணுவத் தலைமையகத்தில் பணியாற்றுகிறார்.

2.மேஜர்ஜெனரல் ஜெகத் அல்விஸ்

இவர் இறுதிக்கட்டப் போரில் நேரடியாகப் பங்கு கொள்ளாதவர். களில் சிக்கிய இவர்கள் மூவர் மீதும் எந்தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை.

அவர்கள் விசாரணைகளை எதிர்கொள்ளவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா ஐ.நா.வுக்கான தூதவராக நியமிக்கப்பட்டபோது கடும் சர்ச்சைகள் வெடித்தன.

அவர் ஐ.நா. அமைதிப்படையின் உயர்பதவிக்கு ஆசிய நாடுகளால் தெரிவு செய்யப்பட்டபோது அதற்கு எதிராக கடும் விவாதங்கள் எழுந்தன.

ஆனால், எதற்கும் மசிந்து கொடுக் காமல் ஐ.நா.வின் அந்தப் பதவியை தக்க வைத்துக் கொள்வதில் மேயர் ஜெனரல் சவீந்திர சில்வா உறுதியாக இருந்தார்.

அண்மையில் அமெரிக்காவில் அதிகாரிகள் வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டனர்.

கடற்படையைச் சேர்ந்த அட்மிரல் திசர சமரசிங்க, அட்மிரல் வசந்த கரன்னகொட, அட்மிரல் பெரேரா, வைஸ் அட்மிரல் டி.சில்வா ஆகியோரும் வெளிநாட்டுத் தூதுவர்களாக்கப்பட்டனர்.

விமானப்படையைச் சேர்ந்த எயர் சீவ் மார்சல் ஜெலத் ஜெயக்கொடி, எயர் சீவ் மார்சல் டொனால்ட் பெரேரா ஆகியோரும் வெளிநாட்டுகளுக்கான தூதுவர்களாக நியமிக்கப்பட்டனர்.

**இவர்கள் அனைவரும் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரே தூதுவர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். ஆனால், போர் முடி வுகு வந்த பின்னரே வெளி நாடுகளுக்கான தூதுவர்களாக அல்லது பிரதித் தூதுவர்களாக சேவையில் உள்ள இராணுவ அதிகாரிகளை அனுப்பும் வழக்கம் உருவானது.**

2009 இல் மேஜர் ஜெனரல் உதய பெரேரா மலேசியாவுக்குான தூதுவராக நியமிக் கப்பட்டு, அதற்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது.

போர்முடிவுக்கு வந்த பின்னர் வெளி நாடுகளில் புலிகள் தலையெடுப்பதை முளையிலேயே கிள்ளி விடு







# புதிய தூதுவர்களாக போர்க்குற்றம் ... சாட்டப்பட்டவர்கள் !

வர்கள், நம்பிக்கைக்குரியவர்கள்.

**1.மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன.**

இவர் பிரேசிலுக்கான பிரதித் தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

அங்கு ஏற்னகவே முன்னாள் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பால சூரிய தூதுவராக பணியாற்றுகிறார்.

அவருக்கு துணையாகவே கமால் குணரட்ண நியமிக்கப்படவுள்ளார்.

இலங்கைக்கு கணிசமான ஆயுதத் தளபாடங்களை விற்கின்ற முக்கியமான நாடுகளில் ஒன்றுதான் பிரேசில்.

அங்கு நீண்டகாலமாகவே ஓய்வு பெற்ற படை அதிகாரிகள்தான் தூதுவர் நிலையில் உள்ளனர்.

முன்னாள் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் றொகான் தலுவத்தையும் அதையடுத்து ஜெனரல் சாந்த கொட்டே கொடவும் அங்கு தூதுவரார்களாக இருந்தனர்.

பின்னர் ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் மஹிந்த பால சூரிய அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

ஆனால், போர்க்களத்துக்கு வெளியே புலிகளை ஒடுக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டவர்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இணைப்பதிகாரியாக பணியாற்றிய இவர் வெள்ளை வான் சர்ச்சைகளில் சிக்கியவர்.

3. அதிகம் பரிச்சயமானவரும், ஏற்கனவே வெளிநாட்டில் இராஜதந்திரியாகப் பணிபுரிபவருமான மேயர்ஜெனரல் சவீந்திர சில்வா.

தற்போது நியூயோர்க்கில் ஐ.நா.வுக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக இருக்கிறார். நான்காவது கட்டப்போரில் மன்னார் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை **58வது டிவிஷனை வழிநடத்தியவர் இவர்.**

**தமிழீழ விடுதலைப்புலிகளை அழிக்கும் நடவடிக்கையில் மிக முக்கிய பங்காற்றியவர்.**

-சுபத்ரா-

கோத்தபாய ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமான இவர் போர்க்குற்றச்சாட்டு சர்ச்சைகளில் அதிகளவில் சிக்கியவர்.

சர்ச்சைக்குரிய குற்றச்சாட்டு சாண்டி புயலால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு உதவுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நியூயோர்க்கில் உள்ள நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலிக கொஹன்னவிடம் கேட்கவில்லை.

மேயர் ஜெனரல் சவீந்திர சில்வாவுக்கே அந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தார். அந்தளவுக்கு அவர் செல்வாக்குள்ளவராக இருக்கிறார்.

இலங்கையின் இராஜதந்திர சேவையில் வெளிநாடுகளுக்கான துதவர்களாக முன்னாள் இராணுவ அதிகாரிகளை நியமிக்கும் வழக்கத்தை அறிமுகப்படுத்தியது ஐ.தே.க. ஆட்சிதான்.

மேயர் ஜெனரல் அன்ரன் முத்துக்குமாரில் தொடங்கி சேபால ஆட்டிக்கல, ஜெனரல் டெனிஸ் பெரேரா, ஜெனரல் வீரதுங்க, ஜெனரல் சிறில் ரணதுங்க, ஜெனரல் ஜெரிசில்வா, ஜெனரல் சிறிலால் வீரசூரிய, ஜெனரல் றொகான் தலுவத்தை, ஜெனரல் சாந்த கொட்டேகொட, லெப்.ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, மேயர் ஜெரல் ஜானகப் பெரேரா,மேயர்ஜெனரல் நந்த மல்லவராச்சி போன்ற இராணுவ வதற்காகவே சேவையில் உள்ள இராணுவ அதிகாரிகள் வெளிநாட்டுத் தூதுரகங்களில் இராஜதந்திரப் பதவிகளில் நியமிக்கப்பட்டனர். பொதுவாக முக்கியமான நாடு களில் உள்ள தூதரகங்களில் பாது காப்பு ஆலோசகர் என்ற பதவி யில் படை அதிகாரிகளை அரசாங்கம் நியமிப்பது வழக்கம்.

அவர்களுக்கு இராஜதந்திரிகள் என்ற அந்தஸ்து கிடையாது. ஆனால், அவர்கள் இராஜதந்திரிகளாகவே நியமிக்கப்பட்டனர்.

மலேசியாவுக்கான பிரதி தூதுவராக நியமிக்கப்பட்ட மேயர் ஜெனரல் உதய பெரேரா, கேபி எனப்படும் குமரன் பத்மநாதனை கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வரும் திட்டத்தில் முக்கிய பங்காற்றியவர்.

அடுத்து ஜேர்மனிக்கான பிரதித் தூதுவராக மேயர் ஜெனரல் ஜெகத் டயஸும், பிரிட்டனுக்கான பிரதித் தூதுவராக மேயர் ஜெனரல் பிரசன்ன சில்வாவும், ஐ.நாவுக் கான தூதவராக மேயர் ஜெனரல் சவீந்திர சில்வாவும் நியமிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடை சிறையில் இந்திய கைதிக்கு கண்ணில் பாதிப்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிலைச்சாலையில் இடம்பெற்ற மோதலின் பின்னர் இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய சிறைக் கைதிகளைச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய 39 இந்தியக் கைதிகளும் எவ்வித பாதிப்பும் இன்றி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா மேற்படி விடயத்தை தஹிந்து பத்திரிகைக்கு வெளியிட்டுள்ளார். குறித்த ஒரு கைதி மட்டும் சிறையில் இடம்பெற்ற கலவரத்தினால் பாதிக்கப்பட்டு கண் உறுத்தலால் அவதிப்படுதவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை படையினருக்கும் கைதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஆயுத மோதலின் போது இந்திய கைதியொருவரின் கண் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா இதன் போது தெரிவித்துள்ளார். (அ-2)

# ஓலைச்சுவடி ஆவணப்படுத்தல்; சுன்னாகம் நூலகம் முன்னெடுப்பு

(கொழும்பு)

நூலகம் நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் முயற்சியில் ஓலைச் சுவடி ஆவணப்படுத்தல் என்ற செயற்பாடு அண்மையில் சுன்னாகம் பொது நூலகத்தில் இடம்பெற்றது.

சோதிடம் மற்றும் மருத்துவம் சம்பந்தமான குறிப்பிட்ட தொகைச் சுவடிகள் முதற்கட்டமாக மின்வடிவத்திற்கு மாற்றப்பட்டன. இவ்வாறு ஆயிரத்து 385 சுவடிகளும் 75 வரையான பண்டைக்கால நாணயங்களும் மின்னூல் வடிவத்தில் ஆவணப்படுத்தப்பட்டன.

ஓலைச்சுவடிகள் ஆவணமாக்கல் தொடர்பான பயிற்சி ஒன்றினை அண்மையில் பாண்டிச் சேரியில் நிறைவு செய்து கொண்டு திரும்பிய நூலக நிறுவனத்தின் நிர்வாக அதிசிவாணந்தமூர்த்தி சேரனுடன் முனைவர் ஜெ. அரங்கராஜ், சுன்னாகம் நூலகர் கே. சௌந்தரராஜன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதுபோன்ற தொடர் செயற்பாட்டில் ஈடுபட நூலகம் நிறுவனம் பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. தொடர்புடையவர்கள் இம்முயற்சிக்கு உதவவேண்டும்என்பதும்நூலகத்தின் எதிர்பார்ப்பாகவுள்ளது. (அ-9-21)

# சிறைச்சாலைக் கலவரத்தால் அதிகாரிகளுக்கு பணி நீக்கம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவத்தினையடுத்து இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த அதிகாரிகள் இருவரும் கலவரம் இடம்பெற்ற மண்டபத்தில் பணியிலிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கலவரத்தின் போது தப்பியோடிய சிறைக்கைதிகளின் எண்ணிக்கை பற்றி முரண்பாடான தகவல்கள் வெளிவந்துள்ளன.

தப்பியோடியவர்களின் எண்ணிக்கை மூன்று தொடக்கம் 5 வரையானது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால், எண்ணிக்கை 20 இலும் அதிகமாக இருக்குமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எது எவ்வாறிருப்பினும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூவரணியொன்று இக்கலவரம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (அ-2)

# கடதாசி தொழிற்சாலையில் சோளப் பயிர்ச் செய்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிப் பிரமாணம், பிறந்த தினம் ஆகியவற்றை முன்னிட்டு வாழைச்சேனை தேசிய கடதாசி கூட்டுப்பதாபனத்தின் 75 ஏக்கர் நிலப் பரப்பில் சோளப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஐம்பது வருடங்களாக பொருளாதார நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படாத 300 ஏக்கர் காணியில் ஒரு பகுதியைத் துப்புரவு செய்து இந்த உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக கூட்டுத்தாபனத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி மங்கல சீ. செனரத் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் உத்தரவுக்கு அமைய கிழக்கின் நவோதயம் திட்டத்தின் கீழ் சோளம் உற்பத்தி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் இத் திட்டமும் மேற்கொள்ளப்படுவதாக செனரத் குறிப்பிட்டார்.

அமைச்சர் தயாஸ்ரீத திசேரா, பிரதி அமைச்சர் சரத் குணரத்ன, அமைச்சின் செயலர் கலாநிதி விலீ கமகே உட்பட கூட்டுத்தாபன ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்கள் 200 பேர் இந்த நிகழ்வில் பங்குபற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)




★ 1505-போர்த்துக்கேய மாலுமியும் நாடுகாண் பயணியுமான லோரன்ஸ் டி அல்மெய்டா, கொழும்பை வந்தடைந்து ஐரோப்பியக் குடியேற்றத்தை ஆரம்பித்தார்.

★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப்படைத் தளபதி வில்லியம் ஷேர்மன் அட்லாண்டா நகரைத் தீக்கிரையாக்கி ஜோர்ஜியாவின் சவான்னா துறைமுகம் நோக்கி நகர்ந்தார்.

★ 1889-பிரேசில் குடியரசாகியது. இரண்டாம் பெதரோ ஆட்சியிழந்தான்.

★ 1926-என்பிசி வானொலியின் 24 நிலையங்களும் தனது வானொலி சேவையைத் தொடங்கியது.

★ 1941- நாசி ஜேர்மனியில் சில உயர் அதிகாரிகளைத் தவிர்த்து அனைத்து ஓரினச் சேர்க்கையாளர்களையும் வதை முகாம்களுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: சொலமன் தீவுகளில் குவாடல்கனல் என்ற இடத்தில் ஜப்பானியப் கடற்படையுடன் இடம்பெற்ற மோதல்களில் கூட்டுப் படைகள் வெற்றி பெற்றன.

★ 1943-நாசி ஜேர்மனியில் அனைத்து ஜிப்சிகளையும் யூதர்களுக்கு இணையாக வதைமுகாம்களுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.

★ 1948- இலங்கையில் மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

★ 1949-நாதுராம் கோட்சே மற்றும் நாராயண். ஆப்டே இருவரும் மகாத்மா காந்தியைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டனர்.

★ 1966-ஜெமினி 12 விண்கலம் அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.

★ 1969-வியட்நாம் போர்: வோஷிங்டன் டிசியில் 2 இலட்சத்து 50 ஆயிரம் தொடக்கம் 5 இலட்சம் பேர் வரையில் போருக்கெதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

★ 1970-சோவியத்தின் லூனா தானூர்தி சந்திரனில் தரையிறங்கியது.

★ 1971-இண்டெல் நிறுவனம் உலகின் வர்த்தக ரீதியிலான முதலாவது 4004 என்ற (single- chip microprocessor ஐ வெளியிட்டது.

★ 1978-டிசி-8 ரக தனியார் பயணிகள் விமானம் கொழும்புக்கு அருகில் விபத்துக்குள்ளாகியதில் 183 பேர் உயிரிழந்தனர்.

★ 1983-வடக்கு சைப்பிரஸ் துருக்கியக் குடியரசு நிறுவப்பட்டது. துருக்கி மட்டுமே இதனை அங்கீகரித்தது.

★ 1988-சோவியத் ஒன்றியத்தின் ஆளற்ற பூரான் விண்ணோடம் தனது முதலாவதும் கடைசியுமான பயணத்தை ஆரம்பித்தது.

★ 1988-பாலஸ்தீன நாடு பாலஸ்தீன தேசிய குழுவினால் அறிவிக்கப்பட்டது.

★ 1990-அட்லாண்டிஸ் விண்ணோடம் எஸ்ரி எஸ்- 38 கப்பலை விண்ணுக்குக் கொண்டு சென்றது.

★ 2002-ஹூ சிங்தாவ் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.

★ 2000-இந்தியாவில் ஜார்க்கண்ட் தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது.

★ 2007-வங்கதேசத்தில் கிளம்பிய பெரும் சூறாவளியினால் 5 ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

### பிறப்பு

★ 1738-வில்லியம் ஹேர்ச்செல், விண்கோள் யுரேனசைக் கண்டு பிடித்த ஜேர்மன் விஞ்ஞானி. (இ.1822)

### இறப்புக்கள்

★ 1630-ஜொஹான்னெஸ் கெப்லர் ஜெர்மனிய கணிதவியலாளரும் வானியலாளரும். (பி.1571)

★ 1949-நாத்துரம் கோட்சே மகாத்மா காந்தியை சுட்டுக்கொன்ற கொலையாளி (பி.1910)

★ 1961-இலங்கையர்கோன், ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர், நாடகாசிரியர்

### சிறப்புநாள்

★ பிரேசில் - குடியரசுதினம் (1889)

**வில்லியம் ஹேர்ச்செல்**



சேர் பிரெடரிக் வில்லியம் ஹேர்ச்செல் என்பவர் ஜேர்மனியில் பிறந்த பிரித்தானிய வானியலாளர் ஆவார். இவர் யுரேனஸ் கோளைக்கண்டு பிடித்தமையினால் சிறப்புப் பெற்றார். இது தவிர அகச்சிவப்பு கதிர் போன்ற பல வானியல் கண்டுபிடிப்புக்களை உலகிற்கு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வரவு செலவுத்திட்டம் 2013 ஒரே பார்வையில்

05

இந்த முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு 185 நாடுகளுக்கான வியாபாரம் புரிதல் சுட்டியில் Doing Business Index இலங்கை 81 ஆவது இடத்தினை அடைந்துள்ளது. எமது நாட்டினை வியாபாரம் புரிவதற்கு சாதகமான 30 நாடுகளில் ஒன்று என்ற நிலைக்கு கொண்டு வருவது எமது இலக்காகும். இப்பின்னணியில் இலக்கிடப்பட்ட தனியார் முதலீடுகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25-27 சதவீதமாக மாற்றுகின்ற முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

9.5 கௌரவ சபாநாயகர் அவர்களே! பெறுமதி உருவாக்கல் செயன்முறையொன்றினை நோக்கிய மாறலானது 2006 இல் 100 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பொருளாதாரமொன்றினை உருவாக்குவதற்கு முடியும். இது ஏற்றுமதிகளை ஏறக்குறைய 15 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதற்கும் இறக்குமதிகளை ஏறக்குறைய 18 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக பேணுவதற்கும் முடியுமான ஆற்றலைக் கொண்டிருக்கும், சுற்றுலாத்துறையானது 2.5 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை உருவாக்கும் என்பதுடன், வெளிநாட்டு தொழில் வருமானம் 10 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை அடையும் எனவும் நாம் எதிர்பார்க்கின்றோம். திறந்த துறைமுக முதலீடுகள் மற்றும் கப்பற் போக்குவரத்து துறைமுக சேவைகளிருந்து சேவை ஏற்றுமதிகள் தேறிய வருமானமாக 3-5 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை சம்பாதிக்க முடியும். இந்த பெறுபேறுகள் எமது பொருளாதாரத்தினை 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வறுமையற்ற, உயர் நடுத்தர வருமானப் பொருளாதாரமொன்றாக வளர்ச்சியடையச் செய்யும்.



© TM GraphicsDesk

## 10. வரட்சியிலிருந்து மீட்சி

10.1. கௌரவ சபாநாயகர் அவர்களே! பருவப்பெயர்ச்சி மழை கிடைத்ததுடன், எமது நாட்டில் நிலவிய மோசமான வரட்சி நிலைமை முடிவடைந்துள்ளது. வரட்சியானது சிறுபோக நெற்செய்கையினை பாதித்துள்ளதுடன், தெங்கு போன்ற நீண்டநாள் பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு மீன்பிடி கைத்தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பலர் குடிநீர் வசதியினையும் அன்றாட வாழ்வாதாரத்தினையும் இழந்துள்ளனர்.

10.2 அரசாங்கமானது வரட்சியினால் ஏற்பட்ட பாதிப்புக்களை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்த அதேவேளை வரட்சியினை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நீர்ப்பாசன வசதிகளை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளையும் செயற்படுத்தியது. விவசாய பிரதிநிதிகளினால் சிபாரிசு செய்யப்பட்ட ஏறக்குறைய 972 நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் அவர்களுக்கான உதவுத் தொகைகளுக்கு மாற்றமாக சில வாழ்வாதார செயற்பாடுகளை உருவாக்குமாறு கேட்டுள்ளனர். இப்பின்னணியில், அவ்வாறான பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு மாதாந்த வருமானமாக ஏறக்குறைய 5 ஆயிரம் ரூபாவினை வழங்கும் வேலைக்கு பணம் என்ற 1,617 நிகழ்ச்சித் திட்டங்களை அரசாங்கம் செயற்படுத்தியுள்ளது. இந்த புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அரசாங்கம் ஏறக்குறைய ரூபா 4,600 மில்லியனை செலவிட்டுள்ளது. வரட்சியினை முகாமை செய்யும் வகையில் எம்மோடு பகிர்ந்துகொண்ட முன் மொழிவுகளின் ஊடாக விவசாயத்தின் பெறுமதியினை பேணுகின்ற விவசாயிகளுக்கு நான் மரியாதை செலுத்துகின்றேன். விவசாயிகள் உதவுத் தொகைகளை எதிர்பாராத போதிலும் இவ்வாறு பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கும் வகையில் தேவையான விதைநெல்லினை இலவசமாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். பெரும்போகம் செய்கை பண்ணப்படும் வரை கடன்களை அறவிடுவதை நிறுத்துமான வங்கிகளைக் கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறான கடன்களுக்கு அறவிடப்படும் வட்டிக் கொடுப்பனவை அனைத்து வங்கிகளும் பதிவளிப்புச் செய்யவேண்டுமென நான் மேலும் முன்மொழிகின்றேன். எனவே, வரட்சியினால் பாதிக்கப்பட்ட ஏறக்குறைய ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு உதவி வழங்கும் வகையில் முன்னெடுப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

10.3 கௌரவ சபாநாயகர் அவர்களே! எதிர்காலத்தில் வரட்சியினை பொருளாதார இழப்புகள் மிகவும் அர்த்தமுள்ள வகையில் முகாமை செய்யப்படுதல் வேண்டும். எனவே, 2013 இலிருந்து அனைத்து விவசாயிகளுக்கும் உர மானியத்தைப் பயன்படுத்துவதற்காக தானிய காப்புறுதி திட்டமொன்றினை செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். வங்கித் தொழில், நிதி மற்றும் காப்புறுதி நிறுவனங்கள் தமது வருடாந்த இலாபத்திலிருந்து ஒரு சதவீதத்தினை அத்தகைய பாதிப்புக்களை ஈடுசெய்வதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு அறவீடாக கட்டாயமாக செலுத்துவதற்கு தேவையான திருத்தம் அறிமுகப்படுத்தப்படும். உர மானியத்திலிருந்து நன்மையடையும் விவசாயிகள், உர மானிய திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு 50 கிலோ கிராம் இரசாயன பசளைக்கும் ரூபா 150 செலுத்துவதற்கு வேண்டப்படுவதன் மூலம் இந்தக் கட்டாயக் காப்புறுதித் திட்டத்தில் காப்புறுதி பத்திரம் வைத்திருப்பவர்களாக ஆக்கப்படுவர். (தொடரும்)

# மனைப்பொருளியல் ஓர் அறிமுகம்

(நேற்றைய தொடர்ச்சி)...

இக்கூட்டத்திற்கு முன்பாக சில கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மனித அறிவியல் (Human Sciences), மனித சூழலியல் (Human Ecology), நுகர்வோர் மற்றும் குடும்ப அறிவியல் ( Consumer & Family Sciences) போன்ற ஒரு சில தலைப்புக்களில் பெயர்களை மாற்றிக் கொண்டனர்.

புதிய பெயர்கள் கல்விச் சமூகத்திடையே நல்ல பதவிகளை வழங்குவனவாகவும் பிரதான பாடங்களாகவும் விளங்குகின்றன. இந்த பெயரிடல் உயர் கல்வித் துறையில் பல நன்மைகளைத் தந்தபோதும் தொடர்ச்சியாக ஒரே பெயரை பயன்படுத்தத் தவறியதன் காரணமாக தனித்துவமான அடையாளத்தை பேணத்தவறியதுடன் தொழில் ரீதியான விருத்தியிலும் கவனம் செலுத்தத் தவறிவிட்டது.

இன்று நிபுணத்துவ அமைப்பு நிறுவப்பட்டு 100 வருடங்களின் பின்னர் குடும்பம் மற்றும் நுகர்வோர் அறிவியல் துறையியலாளர்கள் பாடசால்லை ஆசிரியராக, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியராக, ஆராய்ச்சி உள்ளிட்ட கூட்டுறவு விஸ்தரிப்புத் திட்டங்கள் மூலம் தொடர்ந்து தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். தனிநபர், குடும்பம் மற்றும் சமூகத்தினரின் தரமான வாழ்க்கைக்கு ஊட்டச்சத்து நிபுணர், நுகர்வோர் வல்லுநர், வீடமைப்பு மற்றும் உடை வடிவமைப்பாளர் போன்ற பல்வேறு வழிகளில் தொடர்ந்து தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

**மனைப்பொருளியல் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள்**

கல்வியாளர்களும் மாணவர்களும் பொதுவாக இத்துறையை குறைந்த அந்தஸ்து உடையதாக கருதுகின்றனர். இதற்கு மட்டுப்படுத்தப்பட்ட கல்விசார் நடவடிக்கைகளும் தொழில் ரீதியான தொடர்புகளின்மையும் பிரதான காரணங்களாகும். பாடசாலை மட்டத்தில் இதன் நிலை ஸ்திரமற்று இருப்பதற்கு பெரும்பாலான மாணவர்கள் கல்வி, செயல்முறைகளில் குறைந்தளவு பெறுபேறுகளை வெளிப்படுத்தல் தொடர்ந்து ஒரு குறையாகக் காணப்படுகின்றது. மனைப் பொருளியளானது குறைந்தளவு ஆற்றல் உடைய மாணவர்களுக்கு பொருத்தமான கல்வி/ குறைந்த ஆற்றல் உடைய மாணவர்கள் விரும்பும் கல்வித்தகுதி என்[illegible] வருகின்றது. இத்துறை[illegible] உரியது எனக் கருதுதல் இப்பாடத்தை குறைத்து மதிப்பிடல் போன்ற காரணங்களால் ஆண்கள் இதனை தெரிவு செய்ய தயக்கம் காட்டுகின்றனர்.

**மனைப் பொருளியல் கல்வியின் மூலம் பெறக் கூடிய வேலை வாய்ப்புக்கள்**

மனைப்பொருளியலாளர் பின்வருவனவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபுணத்துவம் பெற்றிருக்கலாம்.

குழந்தைகள் பராமரிப்பு (Child care), நுகர்வோர் கல்வி (Consumer education), வடிவமைப்பு (Design), குடும்ப ஆய்வுகள் (Family Studies) , உணவு சந்தைப் படுத்தல் (Food Marketing), உணவு ஆய்வுகள் (Food Studies), உணவும் ஆரோக்கியமும் (Health and nutrition), உணவு வழங்களும் விருந்தோம்பலும் (Hospitality and Catering), வீடு மற்றும் உள்ளக அமைப்பு (Housing and interiors), உற்பத்தியை மேம்படுத்தல் ( Product promotion), வளமுகாமைத்துவம் (Resouree mangement), தொழிட்நுட்பப் பயிற்சி (Technology Practice), Textiles, Fashion and Clothing.

இவ்வாறு சிறப்புத் தேர்ச்சி பெற்றோர் சமூக சுகாதார அலுவலர் (Community health officer), முதியோர் பராமரிப்பாளர் (Aged care officer), நுகர்வோர் ஆலோசகர்/ அறிவியலாளர் (Consumer advisor/ scientist), ஆலோசகர் (Counsellor), செய்முறையாளர் (Domonstrator), வடிவமைப்பாளர் (Designer), குடும்ப ஆலோசகர் (Family advisor/consultant), உணவு மற்றும் போசனை ஆலோசகர் (Food and nutrition advisor/ consulant), உணவு வழங்கல் நிர்வாகி (Food service manager), உணவு தொழில் நுட்பவியலாளர் (Food technologist), சுகாதார ஊக்குவிப்பு அதிகாரி (Health promotion officer), போசணையியலாளர் / உணவு முறை நிபுணர்கள் (Nuttritionist/ Dietitian) போன்ற பல்வேறு துறைகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று தம்மை மேம்படுத்துவதுடன் சமூகத்திற்கும் தமது பங்களிப்பை திறம்பட வழங்கலாம். இன்றைய காலத்தில் புதிய பல துறை கள் மாணவர்கள் மத்தியில் நல்ல வரவேற் பைப் பெற்று வளர்ந்து வருகின்றன. அந்த வகையில் இனிவரும் காலங்களில் மனைப் பொருளியல் துறையானது தன்கிளைகளை மேலும் பரப்பி தன்னை புதுப்பொழிவுடன் மலரச் செய்வதுடன் சமூகத்திற்கும் பெரும் பங்காற்றும் எம்பதில் சந்தேகம் இல்லை. (முற்றும்)

Home Economics Institute of Australia
Tasmania
heia-tas

மீரா.குகராஜன்
MSc
(Food Service Managemant) & Dietetics

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவு திட்டத்தில் உரையாற்ற அனுமதியில்லை

## சிறப்புரிமை மீறப்பட்டது என கொதிக்கிறார் அஜித்குமார எம்.பி

2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டமை மற்றும் நிகழ்ச்சி நிரலில் இருந்து தமது பெயர் நீக்கப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜே.வி.பி.யின் மாற்றுக்குழு எம்.பியான ஜி.எச்.அஜித்குமார பாராளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை முன்வைக்கவுள்ளார்.

2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமானது. நாளை மறுதினம் சனிக்கிழமை வரை இடம் பெறவிருக்கின்ற இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுவதற்கு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவது மரபாகும்.

இந்நிலையில் மேற்படி விவாதத்தின் மூன்றாம் நாளான கடந்த திங்கட்கிழமை எதிர்க்கட்சிகளின் நேர ஒதுக்கீடு நிரலில் ஜே.வி.பியின் மாற்றுக்குழுவான முற்போக்கு சோசலிஷ முன்னணியின் முக்கியஸ்தரும் ஜனநாயக தேசிய கூட்டணி எம்.பி.யுமான அஜித் குமாரவின் பெயர் இடம் பெற்றிருந்த போதிலும் பின்னர் அது நீக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

விவாதம் இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பிய அஜித் குமார எம்.பி. வரவு செலவுத்திட்டத்தில் உரையாற்றுவதற்கு தனது பெயரும் அதற்கான நேரமும் உள் வாங்கப்பட்டிருக்கின்ற போதிலும் எனக்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது ஏன்? என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடியிடம் கேள்வியெழுப்பினார்.

இதன்போதே பிரதி சபாநாயகர் மேற்கண்டவாறு பெயர் நீக்கம் தொடர்பிலான விடயத்தை வெளியிட்டதுடனான எதிர்க்கட்சியே உங்களுக்கான நேரத்தை ஒதுக்கீடு செய்கிறது. எனினும் இன்று அதனை நீக்கியும் இருக்கின்றது.எனவே உங்களின் பிரச்சினை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்றும் கூறினார்.

இந்நிலையிலேயேதனக்கு நேரம் ஒதுக்கப்பட்டு பின்னர் அது நிரலில் இருந்து நீக்கப்பட்டமை மூலம் தனது சிறப்புரிமை மீறப்பட்டிருப்பதை சபாநாயகருக்கு சுட்டிக்காட்டும் வகையில் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை இருப்பதாக அஜித்குமார எம்.பி நேற்று முன்தினம் தெரிவித்தார். (அ-2)

## தேசத்தின் நிழல் தேசிய மரநடுகை திட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளையொட்டி நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய மரநடுகைத்திட்டமானது யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி 39 நிமிட சுபநேரத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதான நிகழ்வானது மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் மணற்காடு கிராம அலுவலர் பிரிவில் வன வளத்திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் சவுக்குத் தோப்புக்கு அருகாமையில் சமூக காடு வளர்ப்புத் திட்டத்திணை மேம்படுத்தும் பொருட்டு 100 பல்வேறு வகையான மரங்கள் நாட்டப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (அ)

## ஆன்மீக அருளுரை

சின்மயா மிஷன் யாழ்ப்பாணக்கிளை நடத்தும் கந்தபுராணத்தில் வாழ்வியல் தத்துவங்கள் எனும் தலைப்பிலான ஆன்மீக அருளுரை நேற்று தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வரை மகேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

தினமும் பிற்பகல் 3.15 மணி தொடக்கம் பிற்பகல் 4.15 மணிவரை நடைபெறும் இந்த ஆன்மீக அருளுரையை சின்மயா மிஷன் யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா ஆற்றி வருகின்றார்.

மேலும் இங்கு தியானப் பயிற்சி நெறி கடந்த திங்கட்கிழமை தொடக் கம் நாளை வெள்ளிக்கிழமை வரை காலை 6.30 மணியிலிருந்து காலை7.30 மணிவரை நடைபெற்று வருகின்றது. (அ-9)

## மொனராகலையில் சிவப்பு மழை

(மொனராகலை)

மொனராகலை மாவட்டம் செவனகல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சிவப்பு மழை பெய்ததாக தெரிவிக்கப்படுகிறது. செவனகல இந்திகொலபெலஸ்ஸ கிராமத்திலே சிவப்பு மழை பெய்ததாக அக்கிராமத்து மக்கள் தெரிவிக்கின்றனர். மழை நீரை பாத் திரங்களில் சேகரித்துப் பார்த்த போது அந்நீர் சிவப்பு நிறத்தில் இரத்தம் போன்று காணப்பட்டதாகவும் சிவப்பு மழை பெய்த இடங்களில் அதன் படிமங்கள் காணப்ப டுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வீட்டு கூரைகள், இலைகள் மற்றும் ஆடைகளிலும் சிவப்பு படிமங்கள் காணப்படுவதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## XV வது ஆளுநர்கள் மாநாடு 2012 - வட மாகாணம்




## 15வது மாகாண ஆளுநர்கள் மாநாடு 2012 நவம்பர் மாதம் 15ம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றது

15வது ஆளுநர்கள் மாநாடு இவ்வாண்டு நவம்பர் 14,15 மற்றும் 16ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள ரில்க்கோ விடுதியில் நடைபெறவுள்ளது. பிரதான அமர்வு 15 நவம்பர் 2012 அன்று அதே விடுதியில் நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஆளுநர் மாநாட்டில் 2012ம் ஆண்டுக்கான ஆளுநர்கள் மாநாடு வட மாகாணத்தில் நடாத்துவது என தீர்மானிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆளுநரினாலும் அவரின் உத்தியோகத்தர்களாலும் மாநாட்டுக்கான ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வட மாகாணத்தில் முதன் முறையாக ஆளுநர் மாநாடு நடைபெறவுள்ளது. ஆளுநர் என்பவர் ஜனாதிபதி சார்பாக ஒவ்வொரு மாகாணத்திலும் காணப்படுபவர். ஆகவே இம்முறை வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக எடுத்துரைக்க வேண்டிய முக்கிய பொறுப்பு கௌரவ ஆளுநர் ஜீஏ சந்திரசிறி அவர்களுக்கு உண்டு. இலங்கை மட்டுமல்லாது உலகிலுள்ள பல நாடுகள் இந்நிகழ்வு தொடர்பில் கவனம் செலுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஆளுநர் மாநாட்டின் முக்கிய நோக்கம் தத்தமது மாகாணங்களில் இடம்பெற்ற முன்னேற்றங்கள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளுதல் ஆகும். அத்துடன் சில விடயங்கள் தொர்டர்பாக ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலும் அவற்றில் பொதுவான இணக்கப்பாட்டை எட்டுவதும் மற்றுமொரு நோக்கமாகும்.

இம்முறை கடந்த கால மாகாண ஆளுநர் மாநாடுகள் போலல்லாது பல புதிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தமிழ், சிங்கள பாரம்பரியங்களுக்கு அமைய மாநாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விருந்தினர்கள் தமிழ் கலாச்சார முறைப்படி வரவேற்கப்படவுள்ளனர். வரவேற்பு நடனம், விசேட பூஜை நடனம், பரத நாட்டியம், நாட்டிய நாடகம், இசை நிகழ்ச்சி என பல கலாச்சார நிகழ்வுகள் இம்மாநாட்டின்போது மேடையேற்றப்படவுள்ளன.

இம்முறை இந்த மாநாடு இரண்டு காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறுகிறது. 30 வருட யுத்தம் முடிவடைந்த பின்னர் வட பகுதியில் இடம்பெறும் மாபெரும் மாநாட்டு நிகழ்வாக அமைந்துள்ளது. அதேவேளை வட மாகாணத்தில் இவ்வாறான மாநாடு ஒன்று இடம்பெறுகின்றமை இதுவே முதல் தடவையாகும்

மாநாட்டில் கலந்துகொள்ளும் ஏனைய மாகாண ஆளுநர்கள் விசேட கள விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றமை மற்றும் சிறப்பம்சமாகும். இவர்கள் யாழ்ப்பாணம் நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் ஏனைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களுக்கும் விஜயம் செய்வர். இறுதியாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் செல்லவுள்ளனர். வட மாகாணத்தின் பாரிய அபிவிருத்திகளையும் நல்லிணக்க செயல்பாடுகளையும் நேரில் சென்று பார்வையிட்டு விபரம் அறிந்துகொள்ள இது சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. சர்வதேச சமூகமும் இந்த மாநாட்டின் வெளிப்பாடுகள் தொடர்பில் கூடுதல் கவனஞ் செலுத்தியுள்ளது. வட மாகாண அபிருத்தியில் மாகாண ஆளுநர் கௌரவ ஜீஏ சந்திரசிறி அவர்களின் பங்களிப்பும் அளப்பரியது.

மாநாட்டில் வட மாகாண ஆளுநர் ஜிஏ சந்திரசிறி முக்கிய உரையாற்றவுள்ளார். அதில் 2009 ம் ஆண்டு போர் நிறைவுக்கு வந்ததன் பின் வட மாகாணத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பிடவுள்ளார்.

மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்களின் சிறந்த தலைமைத் துவத்திலும் வடக்கு ஜனாதிபதி செயலணியின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான கௌரவ பசில் ராஜபக்ஸ அவர்களின் வழிகாட்டலிலும் வட மாகாணத்தில் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் தென் பகுதியைவிட வட மாகாணம் அண்மைக்காலமாக பல்வேறு துறைகளில் என்றும் காணாத அளவு அபிவிருத்தியை கண்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

14வது ஆளுநர் மாநாடு 2011 ம் ஆண்டு செப்ரெம்பர் 17ம் 18ம் திகதிகளில் பேருவல "எடின் றிசோட் அன்ட் ஸ்பா" விடுதியில் மேல் மாகாண ஆளுநர் கௌரவ எஸ். அலவி மௌலானா தலைமையில் நடைபெற்றது.


ஊவா மாகாண ஆளுநர் கௌரவ சி.நந்தன மத்தியூ, வட மத்திய மாகாண ஆளுநர் கௌரவ கருணாரட்ன திவுல்கனே, மத்திய மாகாண ஆளுநர் கௌரவ டிக்கிரி கொப்பேகடுவ, கிழக்கு மாகாண ஆளுநர் றியல் அட்மிரல் கௌரவ மொகான் விஜய விக்கிரம, தென் மாகாண ஆளுநர் கௌரவ குமாரி பாலசூரிய, வட மேல் மாகாண ஆளுநர் கௌரவ திஸ்ஸ எஸ்.பலல்ல, வட மாகாண ஆளுநர் கௌரவ ஜிஏ.சந்திரசிறி, சப்பிரகமுவ மாகாண ஆளுநர் கௌரவ டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார, ஆளுநர்களின் செயலாளர்கள், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினை சேர்ந்த மேலதிக பணிப்பாளர் நாயகம் அசங்க தயாரட்ண, உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.கருணாரட்ண, நிதி ஆணைக்குழுவின் செயலாளர் டபிள்யூ.எச்.முனசிங்க, தலைவர் ஆரியரட்ண ஹேவகே, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் யூ.எஸ்.கே.தனவத்த ஆகியோர் இதில் கலந்து கொண் டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## அவர்கள் தொப்புள் கொடி உறவுகள் என்கிறார் – வீரமணி

**ஈழத்தமிழர் விடிவுக்கு ஈழத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்புத் தேவை. இந்த பிரச்சினையில் மெக்சிக்கோ போன்ற நாடுகளுக்குள்ள ஆர்வம் இந்தியாவுக்கு இருக்க வேண்டியது அவசியம் என்று திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் உள்ள ஈழத் தமிழர் இனப் படுகொலையை நடத்திய சிங்கள ராஜபக்சவின் அரசு, தீவிரவாதத்திற்கு எதிரான போர் தான் என்று உலக நாடுகளின் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவி நம்ப வைத்தது. 2009இல் என்ன நடந்தது?

போர் நியதிகளுக்கும், நெறிமுறைகளுக்கும் மாறுபட்டு சொந்த நாட்டு மக்களையே குண்டு வீசி அழித்தது; போர்ப் பாதுகாப்புப் பகுதியாகிய (குண்டு வீச்சு நிகழாத) வன்னிப் பகுதிக்கு வந்துவிடுங்கள் என்று பொது மக்களை நம்ப வைத்து, சுமார் மூன்றரை இலட்சம் பேர் திரண்டிருந்தபோது அங் கும் கொத்தணிக் குண்டு வீசி கொடூரமாக ஒரு இலட்சம் தமிழர்களைக் கொன்றது. 90 ஆயிரம் பெண்களை விதவைகளாக்கிப் பழி தீர்த்தது.

2009 இல் கடைசி கட்டப் போரின்போது, கனரக ஆயுதப் பிரயோகம் நிறுத்தப்பட்டு விட்டது என்று இந்தியா போன்ற நாடுகளுக்குக் கூறி, ஏமாற்றிவிட்டு, சரணடைய வந்த வெள்ளைக் கொடியேந்திய அந்த விடுதலைப் புலித் தலைவர்களையும் சுட்டுக் கொன்று வெற்றி என்று முள்ளிவாய்க்கால் பகுதியில் எக்காளமிட்டது. இந்தியாவும் அது தந்த வாக்குறுதியை நம்பிய தலைவர்களும் ஏமாற்றப்பட்டனர்.

யாழ்ப்பாணம் தமிழர் பகுதி என்ற அடையாளத்தையும் மாற்றி அழித்துவிட சிங்களக் குடியேற்றம் அதிவேகமாக நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

உலக நாடுகளிடமும் இந்தியாவிடமும் கொடுத்த வாக்குறுதிப்படி, அரசியல் தீர்வு எதுவும், ஈழத்தமிழர் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் வண்ணம் நடந்த பாடில்லை. இன்னும் மோசமான நிலையே நடக்கிறது.

சர்வதேசப் பத்திரிகையாளர்களோ, ஊடகங்களோ சுதந்திரமான இலங்கையின் தமிழர் வாழும் பகுதிகளுக்குள் செல்ல முடியாத நிலைதான் இன்னமும் காணப்படுகிறது.

ஐ.நாவும் அதன் மனித உரிமை ஆணையும் தலையிட்டு நிலைமை மேலும் மோசமாகாமல் தடுக்க முன் வந்தால் அதுதான் முதல் உதவி ஈழத்தமிழர்களுக்கு.

இந்திய அரசிடம் இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழிகளைச் செயற்படுத்தபடவில்லை. அரசியல் தீர்வு எதுவும் எட்டப்படவில்லை. 4 ஆண்டுகள் கடந்துவிட்டன.

இந்திய அரசிடம் முன்பு ஒப்பந்தம் இட்ட ராஜீவ்காந்தி – ஜெயவர்த்தன என்பதையும் (அதுவே அவ்வளவு உரிமை தந்த ஒப்பந்தம் அல்ல என்ற உண்மைகூட ஒருபுறம் இருக்கட்டும்) செயற்படுத்தவில்லை. இந்திய அரசு கூறிய 13ஆவது சட்டத்திருத்தப்படியான (இதில் எவ்வளவு உரிமை ஈழத்தமிழர்களுக்கு என்பதும்கூட கேள்விக் குறிதான் என்ற போதிலும்) தீர்வுகளைக்கூட செய்ய இலங்கை ஜனாதிபதி தயாராக இல்லை.

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்! மாறாக, ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைக் தாழ்ப்பாள் என்ற முதுமொழிக்கேற்ப, 19ஆவது சட்டத் திருத்தம் என்று ஒன்றை இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிய இலங்கை அரசு அதனைச் செயற்படுத்த ஆவன செய்து கொண்டிருப்பதாக வெளிவரும் செய்தி சற்று நஞ்சம் இருக்கின்ற உரிமைகளைக் கூடப் பறிப்பதாகவே இருக்கும் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்தாகும்.

எல்லா மக்களோடும் சகஜமாக வாழ வேண்டும் என்று ராஜபக்ச அரச நினைத்தால் போர் வெற்றிச் சின்னம் கட்ட முன் வருமா?

மறைமுகமாக இந்திய அரசையே மிரட்டுவது போல சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் நாங்கள் நெருக்கமாகி அவர்கள் மூலம் இராணுவப் பயிற்சி, இராணுவ உதவிகள், பொருளாதார உதவிகள் எல்லாம் பெறுகின்றோம். உங்களை நாங்கள் முழுமையாக நம்பமுடியவில்லை என்று கூறாமல் கூறி அச்சுறுத்தல், அலட்சியப் பார்வையோடும் நடப்பது இந்திய அரசு அறியாததா?

உச்ச நீதிமன்ற நீதிபதியையே அரசுக்கு ஆதரவான தீர்ப்புத் தரவில்லை என்ற காரணத்தால் பதவி நீக்கம் செய்து நீதித்துறையையும் அச்சுறுத்தும் ஆணவம் அங்கே கோலோச்சுகிறது.

தேவை பொது வாக்கெடுப்பு. எனவே இலங்கையின் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றவாளி என்ற முடிவுக்கு இந்தியா தனது முழு ஆதரவைத் தெரிவிப்பதோடு, பொது வாக்கெடுப்பையும் நடத்திட இந்தியா முழு முயற்சிகளையும் செய்து ஈழத் தமிழர் வாழ்வுரிமைக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தர வேண்டியது அவசரமும் அவசியமுமாகும்.

ஐ.நாவிலும் மெக்சிகோ போன்ற நாடுகள் காட்டும் ஆர்வத்தைவிட, தமிழர்களின் தொப்புள் கொடி உறவுள்ள தமிழர்களைப் பாதுகாக்க இந்திய அரசு மேலும் அதிகமான அழுத்தம் கொடுத்து இலங்கை அரசுக்கு எச்சரிக்கை தர முன்வர வேண்டாமா? இத்தருணம் முக்கியமான தருணம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ – 2)



மக்கள் வங்கி பருத்தித்துறை கிளையில் மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் பிரதி முகாமையாளர் ரி.உதயமூர்த்தி மூத்த வாடிக்கையாளர் ஒருவருக்கு நினைவுப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் :- பருத்தித்துறைச் செய்தியாளர்)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் கௌரவிப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் – 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைச் சுன்னாகம் லயன்ஸ் கழகம் வருடாவருடம் கௌரவித்து வருகின்றது.

அந்தவகையில் இந்த வருடமும் இக் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் செ.மாகதேவாவின் அனுசரணையுடன் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த.தேவராஜனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக லயன்ஸ் கழக முதலாவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ, லயன் சீமாட்டி டில்கானி ரஞ்சித் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, யாழ்.பல்கலைக் கழக வணிகபீடத் தலைவர் பேராசிரியர் லயன் க.தேவராஜா, கௌரவ விருந்தினராக உடுவில் கல்விக்கோட்ட ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன், சர்வதேச ஆசிரியர் தினத்தில் 'பிரதீபா பிரபா' விருது பெற்று லயன்ஸ் கழகத்துக்குப் பெருமை சேர்த்த சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினரும் இணுவில் இந்துக் கல்லூரியின் அதிபருமாகிய லயன் மு.செல்வஸ்தானுக்கான கௌரவிப்பும் நடைபெறும் என லயன்ஸ் கழக செயலாளர் சி.ஹரிகரன் அறிவித்துள்ளார். (அ – 9)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையம் ஆகியன நடத்தும் க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான மாபெரும் இல வசக் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் கணிதம், விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமைக்கல்வி, ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களே நடைபெறும்.

அத்துடன் இலவசக் கையேடுகள், குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும் என நூலக சமூகம் அறிவித்துள்ளது. (அ – 9)

# குழந்தைகளுக்கான ஆடை வடிவமைப்பு

லண்டனில் தவழும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை கருத்திற்கொண்டு ஆடை வடிவமைக்கப்பட்டுள்ளது.

குழந்தை செல்லும் இடத்தையும் குழந்தையையும் எப்போதும் இந்த மாப் ஆடை சுத்தமாக வைத்திருக்கும். இந்த புதிய மாப் உடைக்குத் தற்போதே ஏகப்பட்ட கேள்வி உள்ளதாக லண்டன் மாப் ஆடை வடிவ மைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த உடையை தவழும் குழந்தைகளின் கை மற்றும் கால்களில் அவர்கள் உடைமயின் மீது கட்டிவிட்டால்போதும்.

அவர்கள் செல்லும் இடங்களை சுத்தப் படுத்திவிடும். இதனால் குப்பைகள் அகற்றப்படும். தேவையற்ற பொருட்களை குழந்தைகள் வாயில் போட்டுக் கொள்ள முடியாது.

இதனால் அவர்களது உடல்நிலை நோயால் பாதிக்கப்படாமல் ஆரோக்கியமாக இருக்கும் என்று மாப் ஆடை தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. விரைவில் சந்தைக்கு வரவுள்ள இந்த ஆடையை வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப மாற்றம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(அ-2)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யா/சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் செல்வன். வி.றெஜினோல்ட் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய தமிழ் முதன்மை ஆசிரியர் தி.தயாபரன், சிறப்பு விருந்தினராக குருநகர் புனிதயாகப்பர் ஆலய உதவிப் பங்குத் தந்தை அருட்தந்தை பெ.சதீஸ்குமார், கௌரவ விருந்தினராக குருநகர் கல்வி முன்னேற்றக் கழக தலைவர் அ.யேசுதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ – 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து வந்த பாதையைக் கவனி. வாழ்வின் அனுபவச் சுவடுகள் தானே தெரியும்.

-ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பிறவிப் பெருங்கடலையும் நீந்தலாம் திருத்தும் வீதி வழி செல்லலாமோ!

இது கந்தசஷ்டி விரத காலம். விரத அனுஷ்டிப்புகள் எங்ஙனம் நடக்கின்றன என்பதைப் பார்ப்பதற்காக இந்திரன் தலைமையில் தேவலோகக் குழுவொன்று வட பகுதிக்கு விஜயம் செய்கிறது.

புஷ்பக விமானத்தில் வருகின்ற தூதுக் குழுவினர் நல்லூர்க் கந்தப் பெருமானின் ஆலயத்திற்குச் செல்கின்றனர்.

குழுவில் யமதர்மராஜன், சித்திரகுப்தன் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிப்பவர்களின் எண்ணிக்கையைக் கண்ட குழுவினர் மனம் மகிழ்ந்தனர்.

மிகவும் கடுமையான விரதம். அப்படியிருந்தும் இத்தனை பேர் விரதம் அனுஷ்டிப்பது பிரமாதம் என்று தமக்குள்பேசிக் கொள்கின்றனர்.

யமன்: (இந்திரனைப் பார்த்து) சுவாமி! சூரனின் கொடுமை தாளமுடியாமல் முருகனை நோக்கி தேவர்கள் அனுஷ்டித்த விரதத்தை விட அதிகப்படியாக ஈழத் தமிழர்கள் முருகனை வேண்டுகின்றனர்.

ஆனால், சூரனைச் சங்காரம் செய்து தேவர் சிறைமீட்ட முருகன், ஈழத் தமிழர்களின் உரிமை மீட்க வேலைத் தூக்காதது ஏன்?

இந்திரன்: யமதர்மராஜா அனைத்தும் அறிந்த நீயா, இப்படிக் கேட்பது. எல்லாவற்றுக்கும் ஒருகாலம் வேண்டும்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரிக்க அரசு நியமித்த விசாரணைக் குழுவை நம்புகின்ற சம்பந்தர், தெரிவுக்குழுவை நம்பவில்லை.

ஒரு இடத்தில் ஜனாதிபதிக்கு உதவி. இன்னொரு புறத்தில் தமிழருக்காக என்று காட்டாப்பு. இவையாவும் முடிவுக்கு வரவேண்டும்.

விசுவாசமான தலைமை தமிழர்களுக்கு கிடைக்கும்வரை இதுதான் நிலைமை.

சித்திரகுப்தன்: சுவாமி வெளியில் சென்று பார்ப்போமா?

இந்திரன்: அதற்கென்ன, நல்லது!

நல்லூர் ஆலயத்தில் இருந்து குழுவினர் வெளியில் சென்று பலாலி வீதிக்கு வருகின்றனர்.

இந்திரன்: இதென்ன வீதியெங்கும் ஒரே சல்லிக் கல்லு.

யமன்: வீதி திருத்துகிறார்கள்.

(இவர்கள் கதைக்கும் நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த பெண் ஒருவரும் துவிச்சக்கர வண்டியில் வந்த வயோதிபர் ஒருவரும் கல்லுத் தடக்கி கீழே விழுகின்றனர்.)

இந்திரன்: ஓ!... அவர்களைக் காப்பாற்றுங்கள். ஏன் விழுகிறார்கள்?

யமன்: சுவாமி வீதி திருத்தும் பணி நடைபெறும் வட பகுதி எங்கும் இதுதான் கதி.

இந்திரன்: அப்படியா?

சித்திரகுப்தன்: சுவாமி! ஒரு சந்தேகம். நல் லூர் கந்த சுவாமி கோயிலில் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தனர். பலாலி வீதியிலும் அதுதான் நடக்கிறது.

கோயிலிலும் விழுகிறார்கள். வீதியிலும் விழுகிறார்கள். இரண்டுக்கும் என்ன வித்தியாசம் சுவாமி?

யமன்: சித்திகுப்தா, கோயிலில் விழுவது பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்காக.

திருத்தும் வீதியில் விழுவது அந்த வீதியில் பயணிப்பதற்காக.

இந்திரன்: ஓ! அப்படியா சங்கதி! பிறவிப் பெருங்கடலை நீந்தினாலும் வட பகுதியில் திருத்தப்படும் வீதியை தாண்டவே முடியாது போலும். வாருங்கள் நாங்களும் விழுந்து எழாமல் எங்கள் லோகத்திற்குப் போவோம்.

# வல்லரசுகளின் கைப்பாவையாக ஐ.நா. செயற்பட்டுள்ளது- ராமதாஸ்

இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் ஈழத்தமிழர்களை பாதுகாக்க வேண்டும் என்ற கடமையிலிருந்து ஐ.நா. அதிகாரிகள் தவறிவிட்டது தொடர்பாக ஐ.நா.சார்பில் நடத்தப்பட்ட உள்விசாரணை அறிக்கையின் சில பகுதிகள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கையிலிருந்த ஐ.நா. குழுவினர் ஈழத்தமிழர்களின் உயிர்களை எவ்வளவு துச்சமாக மதித்தனர் என்பது தொடர்பாக அறிக்கையில் இடம்பெற்றுள்ள தகவல்கள் பெரும் அதிர்ச்சியும் வேதனையும் தருவதாக உள்ளன என ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் பணியிலிருந்த ஐ.நா. அதிகாரிகள் அங்குள்ள தமிழர்களை காக்கும் கடமையிலிருந்து தவறிவிட்டனர். 2008ஆம் ஆண்டில் போர் உச்சக்கட்டத்திலிருந்தபோது வடக்கு மாநிலத்திலிருந்து வெளியேறவேண்டாம் என ஈழத் தமிழர்கள் கண்ணீர் மல்க மன்றாடிக் கேட்டபோதும் ஐ.நா. அதிகாரிகள் தங்களது உயிரைக் காப் பாற்றிக் கொள்ளும் எண்ணத்துடன் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். அவர்கள் அங்கேயே இருந்திருந்தால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை ஓரளவாவது தடுத்திருக்க முடியும்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது அங்கு என்ன நடக்கிறது என்பதை உலகிற்கு தெரிவித்து இனப்படுகொலையை தடுக்க ஐ.நா. தவறிவிட்டது என்று ஐ.நாவின். முன்னாள் அதிகாரி சார்லஸ் பெட்ரி தலைமையிலான விசாரணைக்குழு அதன் அறிக்கையில் சாட்டையடி கொடுத்திருக்கிறது.

இலங்கையில் போர் உச்சக்கட்டத்திலிருந்த போதே அங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்களைத் தடுக்க ஐ.நா. தவறிவிட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களான நடேசன், புலித்தேவன், ரமேஷ் உள்ளிட்டோர் வெள்ளைக்கொடி ஏந்திச் சரணடையவரும் தகவல் அமெரிக்காவைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் மேரி கொல்வின் மூலம் இந்தியாவைச் சார்ந்த ஐ.நா. உயரதிகாரி விஜய் நம்பியாருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவர்கள் சர்வதேச விதிகளின்படி நடத்தப்படுவார்கள் என்று விஜய் நம்பியார் உறுதியளித்திருந்த நிலையில் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். அப்போதே இலங்கை அரசுக்கு ஐ.நா. மற்றும் இந்திய அதிகாரிகள் உடந்தையாக செயற்பட்டது அம்பலமானது. இந்த நிலையில் ஐ.நா.வின் தவறு இப்போது ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் உலகின் மனச்சாட்சியாக செயற்படவேண்டிய ஐ.நா. இலங்கை மற்றும் அதற்கு ஆதரவாக செயற்பட்ட வல்லரசுகளின் கைப்பாவையாக செயற்பட்டிருக்கிறது என்பது இந்த அறிக்கையின் மூலம் உறுதியாகியிருக்கிறது.

லிபியா, சிரியா போன்ற எண்ணெய் வள நாடுகளில் ஏதேனும் நடந்தால் மட்டும் அங்கு ஆதிக்கநாடுகளின் பிரதிநிதியாக தலையிடும் ஐ.நா. அப்பாவித் தமிழர்கள் விடயத்தில் மட்டும் கண்ணை மூடிக் கொண்டிருந்தது கண்டிக்கத்தக்கது.

ஐ.நா. மீது உலக மக்களுக்கு இருக்கும் கொஞ்சநஞ்ச நம்பிக்கையையாவது காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றால் இலங்கை விவகாரத்தில் செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேடும் நோக்குடன் இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கு ஆணையிட வேண்டும்.

இலங்கை ஆட்சியாளர்களின் கொடூரப் பிடியிலிருந்து ஈழத்தமிழர்களைக் காக்கும் நோக்குடன் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தி தமிழீழம் அமைத்துத் தரவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்துகிறேன் எனக்கூறியுள்ளார். (அ-2)

# இந்தியா- ஆஸி இடையே இராணுவ ஒத்துழைப்பு

## வலியுறுத்துகிறார் ஹிலாரி

இந்தியாவுடனான இராணுவ உறவை அவுஸ்திரேலியா மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வலியுறுத்தியுள்ளார்.


அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும் அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் லியோன் பனெட்டா இருவரும் அவுஸ்திரேலியா சென்றுள்ளனர். அங்கு பல்கலைக்கழகம் ஒன்றில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கூறியதாவது, ஆசிய விவகாரங்களில் இந்தியா முக்கிய பங்காற்றவேண்டும் என்பதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கும். இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இடையே இராணுவ ஒத்துழைப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் இந்தியா- அவுஸ்திரேலியா இடையே இராணுவ கூட்டுப் பயிற்சி நடந்தால் அதை வரவேற்போம் எனப் பேசினார். (அ-2)

## சத்திய தரிசனம்



கடவுள் ஆனந்தமயமானவர். சச்சிதானந்த வடிவம். நிரந்தரமான ஆனந்தம். எந்தவடிவமும் எடுக்கக்கூடியவர். இப்படி அப்படி என யாரும் நிர்ணயித்துக் கூற இயலாதவர். ஆகையால் தெய்வத்தை நாம் விடாது சிந்திக்கவேண்டும். ஆனந்திக்க வேண்டும். நிர்மலமான இதயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதன்மூலம் தான் தெய்வத்துவத்தை அனுபவிக்கமுடியும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்


# முருகனின் மூன்று சக்திகள்

முருகனின் 3 சக்திகள் இச்சாசக்தியின் உருவமாக இருப்பவள் வள்ளி. இவள் திருமாலின் மகளான சுந்தரவல்லி என்கிறது புராணம். முருகனின் வலப்புறமாக இருப்பாள். வலது கையில் இவள் ஏந்தியுள்ள தாமரைமலர் முருகப்பெருமானின் கண்ணிலிருந்து வரும் சூரிய காந்தம்பட்டு எப்போதும் மலர்ந்திருக்கும். அமுதசுரபி, ஏயினர், குலோத்துமை, பெண்கள் நாயகம் என்றெல்லாம் இலக்கியம் போற்றும் இவளை வழிபட்டால் இனிய வாழ்வு பெறலாம்.

அவரது கிரியாசக்தியாக இருப்பவள் தெய்வானை. திருமாலுடைய மகளான அமுதவல்லியே இவள் என்பது புராணம். இவள் முருகனின் இடது பக்கம் இருப்பாள். இவள் தன் கையில் கருங்குவளை மலரை ஏந்தியிருப்பாள். அம்மலர் முருகப்பெருமானுடைய இடது கண்ணிலிருந்து வரும் சந்திரகலை பட்டு எப்போதும் மலர்ந்திருக்கும். இவளை அமுதமாது, தேவகுஞ்சரி, வேழமங்கை எனப்பல பெயர்களால் அழைப்பர். இவள் பொன் உலகுக்கு உரியவள். இவளை வழிபட்டால் வறுமை நீங்கி வளம் பெறலாம் என்பது நம்பிக்கை.

முருகனின் கையிலுள்ள வேல் ஞானசக்தியின் அடையாளமாகும். கோடிக்கணக்கான சூரியன் சேர்ந்தால் எவ்வளவு ஒளி கிடைக்குமோ, அந்த அளவு பிரகாசம் இந்த வேலுக்கு உண்டு என்கிறது திருப்புகழ். வேலை வணங்குபவர்களுக்கு வாழ்க்கை பொய்யானது. இறை இன்பமே நிரந்தர இன்பம் என்ற ஞானம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இலங்கைக் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கத்தினூடாக இவ்விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 16 விளையாட்டுக்கழகங்களுக்கு இவ்விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கத் தலைவர் ம.சந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் வழங்கினார்.

# கழகங்களுக்கு இடையிலான காற்பந்து; குருநகர் பாடுமீன் அணி சம்பியன்

யாழ். உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காற்பந்தாட்ட போட்டியில் குருநகர் பாடும் மீன் அணி வெற்றி பெற்றது. யாழ்ப்பாண காற்பந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களின் விசேட எட்டு அணிகளுக்கிடையில் விலகல் முறையிலான காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தியது.இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியிலேயே குருநகர் பாடும் மீன் அணி வென்றது. இறுதிப் போட்டியில் குருநகர் பாடும் மீன் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதின. தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய பாடுமீன் அணி முதல் கோலை அடித்தது. இந்நிலையில் முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற கோல்கணக்கில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி சுதாகரித்து ஆடியது.எனினும் அவ்வணி கோல் எதனையும் போட முடியாமல் போனது . இத்தருணத்தில் தமக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட பாடும் மீன் அணி இரண்டாவது கோலையும் போட்டது.இந்நிலையில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் பாடும் மீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது.

# சதுரங்கப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவரிடையே நடைபெற்ற தனி நபர் சதுரங்கப் போட்டி முடிவுகள் தென்மராட்சி கல்வி வலயத்தால் அறிவிக்கப்பட் டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்க ளைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**9 வயதின் கீழ் ஆண்கள்**

சி.பிரவீன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) , ச.சஜிந்தன் (மீசாலை வீரசிங் கம் மத்திய கல்லூரி), ந.ஆகாஷ் (கொடி காமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை)

**9 வயதின் கீழ் பெண்கள்**

சி. வினோஜா (சாவகச்சேரி இந்து ஆரம் பப் பாடசாலை), ம.நித்தியா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), பு.கிருஷாளி (சாவகச் சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

**10 வயதின் கீழ் ஆண்கள்**

எஸ். கஜிந்தன் (சாவகச்வேரி இந்து ஆரம்பப் பாடசாலி), அ.பிரணவன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), செ.கீர்த்திகன் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**10 வயதின் கீழ் பெண்கள்**

கு. திசோதா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), க.கவிசனா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), கோ. சஞ்சிகா (சாவகச் சேரி இந்து ஆரம்பப் பாடசாலை),

**11 வயதின் கீழ் ஆண்கள்**

க. கஜராஜ் (சாவகச்சேரி இந்து ஆரம் பப் பாடசாலை), ஜெ. தேனுஜன் (கச்சாய் அ.த.க.பாடசாலை), க.அரவிந்தன் (சாவகச் சேரி டிறிபேக் கல்லூரி)

**11 வயதின் கீழ் பெண்கள்**

உ. மிதுலா (சாவகச்சேரி மகளிர் கல் லூரி), த. சஜீகா (கொடிகாமம் திருநாவுக் கரசு ஆரம்பப் பாடசாலை), ஜெ.ஜெயமதுரா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட சாலை)

**12 வயதின் கீழ் ஆண்கள்**

ச. அஜந்தன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பா.சிந்துஜன் (கொடிகாமம் திரு நாவுக்கரசு மகா வித்தியாலயம்), உ.தர்மிலன் (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்)

**12 வயதின் கீழ் பெண்கள்**

சி.சங்கவி (சாவகச்சேரி இந்துக் கல் லூரி), க.லாவண்யா (வீரசிங்கம் மத்திய கல் லூரி), இ.கேதுஜா (கொடிகாமம் திருநாவுக் கரசு ம.வி.) (அ-3-29)

---

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலய ஆதரவுடன் பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டி முடிவுகள் சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**15 வயதின் கீழ் ஆண்கள்**

த. பாசுபதன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), சி.பிருந்தயன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. ), ஸ்ரீ. பிரதீப் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

**15 வயதின் கீழ் பெண்கள்**

கொ. சௌவிகா (கொடிகாமம் திருநாவுக்கசரு ம.வி.), பு. பிரதீபா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), ஜெ. ஜெயதாரணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கு.பிரியங்கா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி).

**19 வயதின் கீழ் பெண்கள்**

ச.சயந்தி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), அ.மிதுனா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வி.டிலக்சி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.).

**19 வயதின் கீழ் ஆண்கள்**

சி.வினுஜன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), ம.சர்வேசன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பா.தினுசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி). (3-29)

# சாவகச்சேரி இந்துக் கல்லூரி காற்பந்தாட்டத்தில் சம்பியன்



தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் 16 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான காற்பந்தாட்ட போட் டிகள் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய கல்லூரியில் நடைபெற்றது.

மேற்படி போட்டிகளில் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

முதலில் நடை பெற்ற அரையிறுதியில் சாவகச்சேரி இந்துக்கல் லூரியினை எதிர்த்து நாவற்குழி மகா வித்தியாலயம் மோதியது. இந்தப் போட்டியில் சாவகச்சேரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியை எதிர்த்து மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் மோதியது. இந்தப் போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் பின்கள வீரர்களினால் தடுக்கப்பட்டது. இருந்தும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணிகோல் ஒன்றினைப்பெற்று தென்மராட்சி வலயம் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் நாவாற்குழி மகா வித்தியாலயம் 2:0 என்ற கோல் கணக்கில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தை வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்போல் இரட்டைச் சதம் மேற்கிந்தியத் தீவுகள் ஆதிக்கம்



பங்களாதேஷிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் இரண்டாம் நாள் முடிவிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி சிறப்பான நிலையில் காணப்படுகின்றது.

ஆனால் பங்களாதேஷ் அணி ஓரளவு சிறந்த பதிலடியை வழங்கியுள்ளது.

4 விக்கெட்டுகளை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாளைத் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுகளை இழந்து 527 ஓட்டங்களைப் பெற்று தனது இனிங்ஸை இடை நிறுத்தியது.

அவ்வணி சார்பாக 5 ஆவது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத 296 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷிவ்நரின் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 203 ஓட்டங்களையும், டினேஸ் ராம்டின் ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களையும், கெரான் பவல் 117 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக சொஹக் கஷி 3 விக்கெட்டுகளையும், ஷகாதத் ஹொஸைன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின்னர் தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி நேற்றைய நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அவ்வணி சார்பாக முன்வரிசை வீரர்கள் அதிரடியாக ஆடியிருந்தனர்.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக தமிம் இக்பால் 71 பந்துகளில் 72 ஓட்டங்களையும், ஷகாரியார் நபீஸ் 27 பந்துகளில் 31 ஓட்டங்களையும், நயீம் இஸ்லாம் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ரவி ராம்போல் 2 விக்கெட்டுக் ளையும், டரன் சமி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

## இந்திய–இங்கிலாந்து முதல் டெஸ்ட் இன்று

இந்திய அணிக்கும் இங்கிலாந்து அணிக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி நான்கு டெஸ்ட் போட்டி இரண்டு இருபது -20 போட்டி மற்றும் ஐந்து ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி என்பவற்றில் பங்குபற்றவுள்ளது.

போட்டி இன்று காலை 9.30 மணியளவில் அகமதாபாத்தில் ஆரம்பமாகவுள்ளது.

## அவுஸ். முகாம்...

இருந்தனர். அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாத நிலையிலும், உண்ணாவிரதம் இருக்கின்றமை கவலையளிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தஞ்சம்கோரி சென்று முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், வாழ்வதற்குத் தேவையான உணவின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலிய அரசாங்கம் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கடந்த செப்ரெம்பர் மாதம் கடல் செயலாக்கல் கொள்கையை வெளியிட்டிருந்தது.

அக்கொள்கையின்படி, அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக தஞ்சம் கோரி வருவோரை நவுறு தீவுக்கு அனுப்பி வந்தது. ஆனால் தற்போது பப்புவா நியூகினி தீவுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இவ்வாறு அனுப்பப்படுவதற்கு காரணம், படகு மூலம் ஆபத்தான கடல் வழிப் பயணங்களைத் தடுப்பதற்கும், கடத்தல்காரர்களிடமிருந்து மக்களைக் காப்பதற்குமே என தெரிவிக்கப்படுகிறது. (ந-11)

## ஐ.நா. பணியாளர்...

அவர்களை மிரட்டி பணிய வைத்தது என்றும் கூறப்பட்டிருந்தது.

ஒரு சிறிய நாடு ஐ.நாவை பணிய வைத்தது என்று கூறுவது முற்றிலும் பொருளற்றது என்று ஐ.நாவுக்கான இலங்கை தூதுவர் பாலித ஹோகன கூறியுள்ளார்.

பொதுமக்கள் கொல்லப்படுவதை தடுப்பதை கொழும்பில் இருந்த ஐ.நா அதிகாரிகள் தமது பொறுப்பில் ஒன்றாக கருதியிருக்கவில்லை என்றும் அந்த அறிக்கை விமர்சித்திருந்தது.

போர் நடந்த வன்னியில் இருந்து ஐ.நா வெளியேறுவது என்று எடுக்கப்பட்ட முடிபையும் அந்த அறிக்கை கண்டித்திருந்தது.

அதனால்தான் அதிகளவு பொதுமக்கள் கொல்லப்படுவதை ஐ.நாவால் தடுக்க முடியாமல் போனது என்றும் அந்த அறிக்கை கூறியிருந்தது.

இந்த அறிக்கையை ஐ.நாவின் மனித நேயப் பணிகளுக்கான முன்னாள் தலைவரான ஜோன் ஹோம்ஸ் அவர்களும் விமர்சித்திருக்கிறார்.

தாம் பொது மக்கள் இழப்புகள் பற்றி மிகச் சரியாக கூறுவது என்பது அப்போதைய சூழ் நிலையில் மிகவும் கடினமாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் பகிரங்கமாக பேசியிருந்தாலோ அல்லது இறந்தவர்களின் எண்ணிக்கையை அதிகமாக கூறியிருந்தாலோ, இலங்கை அரசாங்கத்தின் செயற்பாட்டில் மாற்றம் இருந்திருக்கும் என்ற கருத்தையும் அவர் நிராகரித்திருக்கிறார். (ந-11)

# ஐ.நா அறிக்கையில் உள்ள உண்மை வெளிவர வேண்டும்

## இரா. சம்பந்தன் கருத்து

(கொழும்பு)

வெளியாகியுள்ள ஐ.நா அறிக்கையை வைத்து பழிவாங்கும் நோக்கம் எமக்கில்லை. ஆனால் அதிலுள்ள உண்மைகள் அறியப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தமிழ் மக்களை பாதுகாக்க ஐ.நா தவறியுள்ளமை தொடர்பாக வெளியாகியிருந்த அறிக்கை தொடர்பாக அளித்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வறிக்கை தொடர்பாக சம்பந்தன் தெரிவிக்கையில்,

2008-ம் ஆண்டு புரட்டாதி மாதம் இலங்கை அரசின் அழைப்பின் பேரில் வன்னிப் பிரதேசத்திலிருந்த ஐ.நா. சபை அதிகாரிகள் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் அப்பிரதேசத்திலிருந்து வெளியேறியிருந்தன.

இதன் பின்னர் ஐ.நா.சபையினால் தேவையின் அடிப்படையில் கூட எவ்வித உதவியும் வழங்க முடியவில்லை. இலங்கை அரசின் ஆணையினால் இவ்வாறு அவர்களால் செயற்பட முடியவில்லை.

பத்திரிகை ஊடகங்கள் கூட அங்கு செல்ல முடியாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டது.

அதாவது 2008 புரட்டாதிக்கு பின்னர் சாட்சிகள் இல்லாத யுத்தமே அங்கு நிகழ்ந்தது. இதனை அன்றைய தினங்களிலேயே நாம் கூறியிருக்கின்றோம்

ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு அது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு நீண்ட காலத்திற்கு பின் வந்த இந்த அறிக்கை ஓர் முக்கியமான அறிக்கை. பல உண்மைகளைக் வெளிக் கொணர்ந்துள்ளது.

இவ்வறிக்கை வெளிவந்த பிறகு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும்.

அவ்வாறு நடந்தால் நாட்டில் நீதி, அமைதி என்பன ஏற்படுவதோடு மக்களிடேயே புரிந்துணர்வும் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ந)

## ஐ.நா.மீளாய்வு அறிக்கை...

சரிவர செயல்பட முடியாமல் தோல்வியடைய வழி வகுத்த அமைப்பு சீர்குலைவு மீண்டும் ஏற்படாமல் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்று தனக்கு ஆலோசனை கூற ஐ.நா.மன்றத் தலைமைச் செயலர் பான் கீ மூன், குழு ஒன்றை நியமித்திருந்தார்.

ஐ.நா.மன்றம் இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தில் சாதாரண பொது மக்களைப் பாதுகாக்க தனக்கு இருந்த ஆணையைப் நிறைவேற்றத் தவறியது குறித்த விபரங்கள் அடங்கிய உள்ளக விசாரணை அறிக்கையை தலைமைச்செயலர் பிரசுரித்து விட்டார் என்று அவருக்காகப் பேசவல்ல ஒரு அதிகாரி கூறியுள்ளார்.

இந்த அறிக்கை, உயிர்ச் சேத விபரங்களை ஐ.நா மன்றம் வெளியிடத் தவறியது. மற்றும் பொது மக்கள் கொலைகளுக்கு அரசாங்கத்துக்கு இருந்த பொறுப்பு ஆகியவைகளையும் விபரிக்கிறது.

ஐ.நா மன்றம் இந்தச்சம்பவத்திலிருந்து பொருத்தமான பாடங்களைப் பெறவேண்டும். மோதல் பகுதிகளில் உதவியை நாடும் பொது மக்களின் நம்பிக்கையைப் பெற தன்னாலான அனைத்தையும் செய்ய வேண்டும் என்று தலைமைச் செயலர் பான் கீ மூன் உறுதியுடன் இருப்பதாக அந்த அதிகாரி கூறினார். (ந-11)

## பொதுநலவாய உச்சி...

பொதுநலவாயத்தின் எதிர்காலம் மற்றும் பங்கு தொடர்பான பிரித்தானிய வெளிவிவகாரக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த அறிக்கையில், 2013ல் பொதுநலவாய உச்சி மாநாடு நடைபெறவுள்ள இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான சாட்சியங்கள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில், அமைதி உண்மையை ஆராயும் சுதந்திரமான விசாரணை, மனித உரிமைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தும்வரை பொதுநலவாய உச்சி மாநாட்டில் பங்கேற்பதை வெளிப்படையாக நிராகரிக்க வேண்டும் என்று பிரித்தானிய பிரதமரிடம் வெளிவிவகாரக் குழு கோரியுள்ளது.

இலங்கையில் 26 ஆண்டு கால உள்நாட்டுப் போர் 2009ல் முடிபுக்கு வந்தபோதும், நூற்றுக் கணக்கானோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தன்னிச்சையான, சட்டவிரோத தடுத்து வைப்புகளும், ஆட்கள் பலவந்தமாக காணாமற் போவதும் வழக்கமாக உள்ளன.

உறுப்பு நாட்டு அரசாங்கங்களின் அடக்கு முறைகளால் பொதுநலவாயஅமைப்பின் தார்மீக அதிகாரம் பலவீனப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பொதுநலவாய அமைப்பு பிரித்தானியாவின் முன்னாள் முடிக்குரிய நாடுகளின் கூட்டமைப்பு என்பதால், பிரித்தானியப் பிரதமர் இந்த மாநாட்டை புறக்கணிக்க முடிபு செய்தால், கொழும்பில் இந்த மாநாட்டை நடத்துவதில் இலங்கைக்கு பெரும் நெருக்கடி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-11)

## 13ஆவது இரத்தா?...

இவ்விடயத்தை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சமர்ப்பிக்க அரசாங்கம் விரும்புகின்றது. அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகள் 13-வது திருத்தத்தை ரத்துச் செய்யக் கோரினாலும் இது அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ கருத்து அல்ல.

அரசாங்கத்தின் கருத்து, மகிந்த சிந்தனையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அரசாங்கம் 13-வது திருத்தம் பற்றிப் பேச தயாராக உள்ளது. கிராம சபை, மாவட்ட சபை மற்றும் மாகாண அரசாங்கங்கள் பற்றியும் பேச அரசாங்கம் தயாராக உள்ளது.

ஆயினும் ஒற்றையாட்சி நாடு என்ற அடிப்படையிலேயே எந்தவொரு தீர்வும் அமைய வேண்டும் என அரசாங்கம் வலியுறுத்தும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எதிர்க் கட்சியினர் அங்கத்தவர்களை நியமிக்காததனால் அது செயற்படாது உள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தொடர்ந்து அவசரமாக 13-வது திருத்தம் செய்யப்பட்டதையும் அதில் குறைபாடுகள் உள்ளதையும் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுள்ளது.

எனவே இலங்கைக்கே உரித்தான ஒரு அதிகாரப் பகிர்வு முறையை அரசாங்கம் உருவாக்கும் என்பதை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு தெளிவாக கூறியுள்ளது.

மேலும் அரசாங்கம் தேசியப் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தப்படுவதை வலுவாக எதிர்க்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஐ நகர்த்தி விளையாடு...

...யைசமர்ப்பித்துஇந்தஅரசாங்கம்ஐநா.சபைக்கு செய்து கொடுத்த சத்தியமாகும் என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

அதிகாரப் பகிர்வு, நல்லிணக்க போராட்ட இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரை யாற்றியமனோகணேசன்மேலும்கூறியதாவது,

பகவத்கீதை, பைபிள், திருக்குரான், தம்ம பதம் ஆகிய புனித நூல்களைப்போன்று இன்று அரசாங்கம் அரசியல் ரீதியாக கற்றுக் கொண்ட ஆணைக்குழு அறிக்கையைதான் பயன்படுத்துகிறது.

இந்த அறிக்கையில் இன்று இருக்கும் அதிகாரப் பகிர்வு அமைப்பை அடிப்படை யாகக் கொண்டு மேலே செல்ல வேண்டும் என்றும் அதை அபிவிருத்தி செய்யவேண் டும் என்றும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இதை எடுத்துச் சென்றுதான் மகிந்த சமர சிங்க, ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் ஐ.நா. மனித வுரிமை ஆணைக்குழுவில் சத்தியம் செய்து வந்தார்கள். இதில் உள்ள சிபார்சுகளை அமுல்படுத்துவதாக சொல்லி வந்தார்கள். ஆகவே 13ஆம் திருத்தத்திற்கு மேலே போக முடியுமே தவிர கீழே போகமுடியாது.

விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க என்ற அமைச்சர்கள், குணதாஸ அமரசேகர என்ற பல்வைத்தியர் சொல்வதைப் போல் நாட்டைக் கொண்டு நடத்த முடியாது. அதிகாரத்தை பகிர் வதன் மூலம் நாட்டுப் பிரிவினையை தவிர்ப் போம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ, மக்களை ஒற்றுமைப் படுத்துவோம் என நாம் கூறுகிறோம்.

ஆனால் இனவாதிகள் இந்த ஒற்றுமைக்கு எதிராக கூக்குரல் இடுகிறார்கள். அதிகாரத்தை பிரித்து நாட்டுப்பிரிவினையை தவிர்ப்பதை எதிர்க்கிறார்கள். ஆகவே இவர்கள் தான் பிரி வினை வாதிகள். ஐக்கியத்தை ஏற்படுத்த குரல் கொடுக்கும் நாம் இந்த நாட்டின் இன ஒற்று மையை பாதுகாக்கும் தேசியவாதிகள் என வும் மனோ கணேசன் தெரிவித்தார்.

மேலும் அவர் வெலிக்கடை சிறைச்சாலை கலவரம் பற்றியும் உரையாற்றினார். வெலிக் கடைச் சிறைச்சாலைக்கு உள்ளே போதைப் பொருட்கள், ஆயுதங்கள் இருக்கின்றன என இராணுவத்தையும் பொலிஸையும் அனுப்பி தேடினார்கள்.

அதனால் கலவரம் மூண்டு இன்று 27 பேர் கொல்லப்பட்டும் 50ற்கும் மேற்பட்டோர் காயப்பட்டும் உள்ளார்கள். இது அதிகாரப் பூர்வ தகவல். ஆனால் அதிகார பூர்வ மற்ற முறையில் 150ற்கும் மேற்பட்டோர் காயப்பட் டோ, கொல்லப்பட்டோ உள்ளார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளது.

இந்தப்பொருட்கள்எப்படிஉள்ளேபோயின? ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தில் இந்திய விமா னங்கள்பருப்புக்கொண்டுவந்துபோட்டதுபோல் இங்கே எவராவது விமானத்தில் போதைப் பொருட்களையும் ஆயுதங்களையும் கொண்டு சென்று போட்டார்களா?

இந்த பொருட்கள் வாயில் கதவுகள் வழி யாகத்தான் போயுள்ளன. சிறைக்காவலர் கள் இந்தப் பொருட்களை உள்ளே கொண்டு செல்ல இடமளித்துள்ளார்கள். எனவே இந்த வழிமுறையை நீங்கள் மாற்றியமைக்க வேண்டும். இந்த விடயத்தில் முதல் குற்ற வாளிகள் இவர்கள் தான்.

மனிதவுரிமை ஆணையாளர் ஆனந்த ராஜா லண்டன் பி.பி.சியில் என்ன சொன்னார்? கடந்த் மாதங்களில் இந்தச் சிறைச்சாலைக் குச்சென்றுவந்து ஆய்வறிக்கை தயாரித்து பல சிபார்சு களை சிறைச்சாலை திணைக்களத் திடம் தாம் வழங்கியதாக சொல்கிறார்.

இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழு வின் இந்த சிபார்சுகள் அமுல் செய்யப்பட வில்லை. அதனால்தான் கலவரம் ஏற்பட்டு இந்தளவுக்கு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

மகிந்த சமரசிங்க கடந்தவாரம் ஐ.நா. சென்று என்ன சொன்னார்? இந் நாட்டில் மனிதவுரிமை ஆணைக்குழு இருக்கிறது. அது சுதந்திரமாக செயல்படுகிறது. அதன் யோசனைகளை தமது அரசு கவனத்தில் எடுப்பதாக சொன்னார். இங்கே என்ன நடந் துள்ளது?

வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளை தே... இனப்பிரச்சினைகளை கற்றுக் கொ... பாடங்கள் ஆணைக்குழுவின் சிபார்சுக... அமுல் செய்யும் பிரச்சினைகளை விட்டுவி... கள். கொழும்பில் அமைந்துள்ள ஒரு சி... சாலை சம்பந்தமாக மனித உரிமை ஆ... குழு தருகின்ற சிபார்சுகளைக் கூட உங்க... அமுல் செய்ய முடியவில்லை. வெ... கெட்ட அரசாங்கம், வெட்கம் கெட்ட அ... சர்கள்.

கொலை செய்யப்பட்ட பாதாள கோ... களை, போதைப்பொருள் வியாபாரிக... ஊட்டிவளர்த்தவர்கள் யார் என்பது இந்... மக்களுக்கு தெரியும். இன்று இவர்க... கொன்று போடுவதன் மூலம் சாட்சியா... அழிக்கப்பட்டுவிட்டன. இதுதான் நடந்துள்...

சிறைச்சாலை சண்டை முடிந்தபின்... காலையில் மீண்டும் தமது பிள்ளைக... தேடி வந்து கூட்டிச் சென்று சுட்டுக்... றுள்ளார்கள் என கொல்லப்பட்ட சிலரது... தந்தையர்கள் சொல்கிறார்கள். இது ப... மானது. இந்தக் குற்றச்சாட்டுக்கு அரசு... சொல்ல வேண்டும் எனவும் மனோ கணே... தெரிவித்துள்ளார்.


இணையத்தில் சுயமாக வேலை செய்...
Part Time | மாதம் ஒரு லட்சம் (Rs 100,000/-) வரை | Full...
Data Entry, Web Designing, Face B...
Copy Typing, Photoshop. C++, J...
Accounting.... உட்பட 300க்கும் மேற்பட்ட வேலை...
ONLINE JOBS
International Master Card, ...
விளக்கம்.
ACS
Tel:077-3967334 / 077-007...
கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்...
இருந்து 100 m தொலைவில்.


# ...டி அகதிகள் வீடு...

இது தொடர்பாக தமிழக அரசு தெரிவிக்கை யில், அகதிகள் முகாம்களில் வாழும் இலங் கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கி படிப் பதற்காக ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப் பட்டோர் நல விடுதிகளில் கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அகதிகள் முகாம்களிலிருந்து உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஊக் கத் தொகை வழங்குதல், மருத்துவக் காப்பீட் டுத் திட்டத்தில் பயன்பெற வகைசெய்தல், முகாம்களில் இயங்கி வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூடுதல் மானியம் வழங்குதல், தமிழக அரசால் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியப் பலன்களை இலங்கை தமிழர் களுக்கு வழங்குதல் போன்ற பல்வேறு நலத் திட்ட உதவிகளை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.

மேலும் தமிழகத்திலுள்ள இலங்கை அகதி கள் முகாம்களில் வாழும் தமிழர்களின் நல னுக்காக, அந்த முகாம்களில் வசிக்கும் மக் களின் குடிநீர் வசதியினை மேம்படுத்துதல், வீடுகளை பழுதுப்பார்த்தல், சாலைகள் சீர மைத்தல் நூலகக் கட்டடம் கட்டுதல், நியாய விலைக் கடை அமைத்தல், கூடுதல் கழிப் பறை மற்றும் குளியலறை ஏற்படுத்துதல், சமுதாய கூடங்கள் அமைத்தல், மின்கம்பங் கள் மற்றும் தெருவிளக்கு அமைத்தல், சமை யலறை கட்டுதல் போன்ற அடிப்படை வசதி களை செய்துக் கொடுப்பதற்காக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய முதல்வர் ஜெய லலிதா ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்.

தற்போது, அகதிகள் முகாம்களில் வசிக் கும் இலங்கை தமிழர்களின் நலனுக்காக, கோயம்புத்தூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், மதுரை, புதுக் கோட்டை, சேலம், சிவகங்கை, திருவள்ளூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 14 மாவட்டங்களில் உள்ள 21 அகதிகள் முகாம்களில் ஒரு வீட்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,500 நீடித்து நிலைக்கக் கூடிய புதிய வீடுகளை கட்டுவதற் கும், அதற்காக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் முதலமைச்சர் உத்தரவிட்டுள் ளார்.

அரசின் இந்த நடவடிக்கைகள் அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர் களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வழி வகுக்கும் என்று கூறப்பட்டுள்ளது. (ந-11)

# பரிதி...

தெரிவித்துள்ள பரிதி யின் மகள், இந்த படு கொலைக்கு இலங்கை முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும் என்றும் குறிப் பிட்டுள்ளார்.

பரிதி சுட்டுக்கொல் லப்பட்ட இடத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இதேவேளை மேற் படி படுகொலைச் சம் பவத்துடன் தொடர் புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்என்றுபாரிஸ் பொலிஸார் அறிவித் துள்ளனர். (ந-11)

# விசார...

ஆகியோர் விசாரணை களுக்கான பாராளு மன்ற தெரிவுக்குழுவில் அங்கத்துவம் வகி கின் றனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக் கவுக்கு எதிராக 117 ஆளும் தரப்பு எம்.பிக்களின் கையொப்பத்துடன் கூடிய குற்றப் பிரே ரணை சபாநாய கரிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன் பாராளு மன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகள் அனைத் தும் ஒரு மாத காலப் பகுதியினுள் நிறைவடை யும் என எதிர்பார்க்கப் படுகிறது. (ந-11)


## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா

- 2 வருடத்தில் நிரந்தரக் குடியுரிமை பெற சட்டரீதியான அருகதை
- குழந்தைகளின் கல்விக்கான ஆலோசனை
- வேலைவாய்ப்புக்கான ஆலோசனை
- கணவன் அல்லது மனைவி 54 வயதுக்குட்பட்டவர்கள்

ஆஸ்திரேலியா விசா ஆலோசனைத் துறையில் தனித்துவமான பல வித வெற்றிகளைச் சந்தித்த நிறுவனம் நாங்கள் மட்டுமே

## நியுசிலாந்து குடும்ப விசா

- கணவன் அல்லது மனைவி பட்டதாரி அல்லது டிப்ளோமாதாரிகள்
- ஆங்கிலமொழி மூலம் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தால் IELTS தேவையில்லை அன்றேல் 5.5 புள்ளிகள ACADAMIC அவசியம்
- 10 இலட்சம் வங்கி அனுசரணை போதுமானது

## நியுசிலாந்து Student Visa

- 24 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள்
- IELTS 5.5 புள்ளிகள் அவசியம்
- வேறு ஒருவரின் வங்கி வைப்பை அனுசரணையாகக் காட்டக்கூடிய வாய்ப்பு
- 2 வருடங்களில் PR பெறலாம்
- சர்வதேச தரத்திலான கல்வி

## சைபிரஸ் ஐரோப்பிய நாடு

- மாதாந்தம் பகுதிநேர தொழில் வாய்ப்பின் மூலம் 100 000 வரை சம்பாதிக்கலாம் வங்கி அனுசரணை எதுவும்தேவையில்லை

## மலேசியா Student Visa

- IELTS தேவையில்லை
- வங்கி அனுசரணை தேவையில்லை
- பகுதி நேரத்தொழில் வாய்ப்புக்கான ஆலோசனை

வெள்ளிகிழமைகளில் விடுமுறை



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

(PV 82703)

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9016

(ச-1502)



# பொன்னான வாய்ப்...

மலேசியாவில் ஹோட்டல் முகாமைத்துவப் ... பும் மாதாந்த சம்பளமும் (ரூ.30,000 மும்) இல... தங்குமிட வசதி, இலவச உணவும்.

- 30 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிக...
- O/L மட்டும் போதுமானது.
- 2 வருடங்களில் கற்கை நெறி பூர்த்தியானவு... மலேசியா அல்லது சிங்கப்பூரில் உயர்ந்த வேத... துடன் வேலைவாய்ப்பு.
- முதல் வரும் 20 பேருக்கே இவ்வரிய வாய்...

திசைகாட்டி பிறைவேற் லிமி...

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவ...

(pv 82703)

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே இல: 021 221 9016



L.L. NO. 2490

DOHA QATAR நாட்டில் உடனடி வேலைவாய்...

உங்கள் வாழ்வுக்கு ஒளியூட்டுமுகமாக இலங்கை அரசாங்கத்தினாலும் வெளிந... வேலைவாய்ப்பு அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு ... நிறுவனத்தினால் இம்மாதம் 17ஆம் திகதி Green Grass Hotel யாழ்ப்பாணத்திலு... ஆம் திகதி Star Rest கிளிநொச்சி பரந்தனிலும் காலை 09.00 மணியிலிருந்து 05 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க்காணும் தகுதியுடையவ... உடன் நேரில் வரவும்.

டிக்கட், பியீரோ உட்பட விஸா கிடைத்தவுடன் மொத்தக் கட்டணமாக ரூபா 60 ஆயிரம் மட்டுமே அறவிடப்படும். House Maid (வீட்டுப் பணிப்பெண்களுக்கு 06 மாத சம்பளம் முற்பணமாகவும் மற்றும் அனைத்து செலவுகளும் முற்றிலும் இலவசமாக செய்து அனுப்பிவைக்கப்படும்.

| JOB | QTY | SALARY (Q.R) |
|---|---|---|
| மேஷன் (Mason) | 75 | 1,200-1,500 |
| இலக்ரிஷியன் (Electrician) | 20 | 1,200-2,000 |
| கார்பென்டர் (Carpenter) | 28 | 1,200-1,500 |
| பெயின்டர் (Painter) | 18 | 1,000-1,200 |
| கம்பிக் கூடு கட்டுபவர்கள் (Steel Fixer) | 32 | 900-1,000 |
| உதவியாளர்கள் (Helpers) | 112 | 900-1,000 |
| சுத்திகரிப்பாளர்கள் (Cleaners) | 96 | 800-900 |
| சமையல்செய்பவர்கள் (Cook) | 05 | 1,000-1,200 |
| கணக்காளர் (Accountant) | 08 | 1,200-2,000 |
| சாரதிமார்கள் (Drivers) | 55 | 1,200-1,600 |
| A/C Technician | 16 | 1,200-2,000 |
| Welders | 12 | 1,200-2,000 |
| Marketing | 12 | 1,200-,4,000 |

1 QR = Rs. 36.75

சலுகை... விதிமுறை... இல... தங்கு... போக்கு... மருத்த... மேலதி... உ... நாள... வேலை... 8 ம... யால...

17ம் திகதி — Green Grass Hotel #33, Aasirwatham Lane, Hospital Road, Jaffna.

18ம் திகதி — Star Rest Kandy Road, (Paranthan) Kilinochchi.

பதிவுகளுக்கு விரையுங்கள்

AIR TRUS...

OVERSEAS MAN POWER CONSUL...

#985, 1ST FLOOR MARADAN... BORELLA, COLOMB...

011 - 2676777, 075 065...


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org